# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-9881)


சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 02 வெள்ளிக்கிழமை (17.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 211

## கடைக்குச் சென்ற சிறுவனை காணவில்லை



23

## யாழ்.கொழும்புத்துறையில் வீட்டு வளாகத்தில் 17 கைக்குண்டுகள் மீட்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் வீடொன்றை சுத்தம் செய்தபோது 17 கைக்குண்டுகள் 23

## பாடசாலைகள் அடுத்த வாரம் மீண்டும் திறப்பு


### அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)
தற்காலிகமாக மூடப்பட்ட பாடசாலைகள் அடுத்த வாரம் மீண்டும் திறக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. அமைச்சரவை 23

## 19ஆவது திருத்தத்தை பலவீனப்படுத்தாமல்

# ஜனநாயகத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## ஐ.தே.க தலைவர் ரணில்



(கொழும்பு)
**அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை பலவீனப்படுத்தாமல் ஜனநாயகத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சி நேற்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது. பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தும் விதமாக இந்த விஞ்ஞாபனம் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால், கட்சி தலைமையமான சிறிகொத்தாவில் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது. டிஜிட்டல் முறையிலான விஞ்ஞாபனமே வெளியிடப்பட்டது.

கொரோனா வைரஸால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பொருளா 23

## அடுத்த வாரம் யாழ்.வருகிறார் ரணில் விக்கிரமசிங்க

(யாழ்ப்பாணம்)
முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக் கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள தேர்தல் பிரசாரத்தில் கலந்து 23

## பூவரசங்குளத்தில் ஒருவருக்கு கொரோனா

(குப்பிழான்)
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று வியாழக் கிழமை 116 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட் 23

## மண்டைதீவு கடற்பகுதியில் 111 கிலோ கஞ்சா மீட்பு

### சந்தேகத்தில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மண்டைதீவு கடற்பகுதியில் கஞ்சா போதைப்பொருளை 23

## பொருளாதார நெருக்கடியை மக்கள் மீது ஒருபோதும் சுமத்த மாட்டோம்

### பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)
மின்சாரக் கட்டணத்தை செலுத்துவதில் நிவாரணம் வழங்குவதால் அரசாங்கத்திற்கு 3 பில்லியன் நட்டம் ஏற்படும். பொருளாதார 23

## மிருசுவில் படுகொலையாளிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு

### உச்ச நீதிமன்றில் இன்று வழக்கு

(யாழ்ப்பாணம்)
யாழ்.மிருசுவில் பகுதியில் 8 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளியான 24

## யாழ்.பிரதான தபாலகத்தில் தமிழில் பற்றுச்சீட்டு பெற 30 நிமிடங்கள் காத்திருப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்.பிரதான தபால் நிலையத்தில் பற்றுச்சீட்டை தமிழில் எழுதித் தரக்கூறி இளைஞர் ஒருவர் சுமார் 30 23


பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
ஆசிரியையாய் மாணாக்கருக்கு
நல் அரசியல்வாதியாய் மக்களுக்கு





X
தமிழ் மக்கள் தேசிய கூட்டணி
சி.வி.விக்னேஸ்வரன் 6





8 திருமதி மீரா அருள்நேசன் (தமிழ் மீரா)
தன்னாட்சி தற்சார்பு தன்னிறைவு
(C-055)

# தம்மை நம்பிய மக்களை ஏமாற்றாதவர்களே சிறந்த மக்கள் பிரதிநிதிகளாவர்

## யாழ். மாவட்ட வேட்பாளர் சிற்பரன் கருத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

எந்த வேட்பாளர் எமக்காக இதய சுத்தியுடன், விலை போகாமல் எமது கொள்கைகளை ஈடேற்றப் பாடுபடக் கூடியவர் என்பதனை எம் மக்கள் சிந்திக்க வேண்டும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் தவச்செல்வம் சிற்பரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி -மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் மக்களிடம் வாக்கு கேட்டு வருவோர் தேர்தலின் பின்னர் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் அதற்கு நேர் எதிராகச் செயற்படுவதனைக் கண்டிருக்கிறோம். தமக்கு வாக்களித்த மக்களை யார் ஏமாற்றாமல், அவமானப் படுத்தாமல் நேர்மையாகச் செயற்படுகிறாரோ 'அவரே சிறந்த மக்கள் பிரதிநிதியாக முடியும்.

அந்த அடிப்படையில் கடந்த 2013ஆம் ஆண்டு நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் ஐயாவை தெரிவு செய்யுமாறு கேட்டு நாம் மக்களிடம் சென்றோம். மீண்டும் 7வருடங்களின் பின்னர் தற்போது விக்னேஸ்வரன் ஐயாவின் பெயரைக் கூறிக் கொண்டு மக்களிடம் செல்கிறோம்.

அவ்வாறு நாம் மீண்டும் செல்லும் போது அவர் எமக்கு எந்தவித சங்கடத்தையும் ஏற்படுத்தாத அளவிற்கு நேர்மையாகச் செயற்பட்டுள்ளார். சிலர் 5வருடங்களின் பின்னர் மீண்டும் மக்களிடம் செல்லும் போது கூனிக்குறுகித் தான் செல்ல வேண்டும். அந்தளவிற்கு மக்கள் அவர்கள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். ஆனால் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனின் நேர்மையான, அப்பழுக்கற்ற அரசியல் செயற்பாட்டால் நாங்



கள் நெஞ்சை நிமிர்த்தி துணிவாக மக்கள் முன் செல்லக்கூடியதாக உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,30)

## நடைபாதையில் வாகனத்தை நிறுத்துவோர் மீது வழக்கு

### இன்று முதல் பொலிஸ் சிறப்பு நடவடிக்கை

இன்று வெள்ளிக்கிழமை முதல் வீதிகளில் நடைபாதையில் வாகனத்தை நிறுத்துபவர்களுக்கு எதிராக சட்டம் கடு மையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

நடைபாதையில் வாகனங்களை நிறுத்துவது சட்டத்துக்குப் புறமபானது. எனவே அதனைத் தடுக்கும் வகையில் இன்று முதல் சிறப்பு பொலிஸ் நடவடிக்கை முன்னெடுக்கப் படவுள்ளது.

சட்டத்தை மீறி நடைபாதையில் வாகனத்தை தரித்து நிறுத்துவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார். (ம-3)

## பொலிஸார் மீது தாக்குதல் பெண்கள் உட்பட 13 பேர் கைது

அங்குலானை பகுதியில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பெண்கள் உட்பட 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அங்குலான பகுதியில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோக சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சாட்சியாளர்கள் இருவரை அங்குலான பொலிஸார் மொரட்டுவை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்குலான துப்பாக்கி பிரயோகத்தில் உயிரிழந்தவரின் உறவினர்கள் அங்குலான பொலிஸ் நிலையத்திற்கு அருகில் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் பொலிஸார் மீதும் பொலிஸ் நிலையத்தின் மீதும் தாக்குதலை நடத்தியுள்ளனர்

நிலைமையை கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸார் கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. இதனைத் தொடர்ந்து கலகமடக்கும் விசேட பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினர் குறித்த பகுதிக்கு வரவழைக்கப்பட்ட பின்னர் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.(ம-3)

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**அன்பர்களின் வேண்டுகோளுக்கமைய மீண்டும் மனவளக்கலை யோகாப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது**

கடந்த சில மாதங்களில் உலகம் முழுவதும் நடைபெற்ற கொடிய கிருமித் தொற்றிலிருந்து மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பியிருப்பினும் இன்னும் **உலக தலைவர்களும் விஞ்ஞானிகளும் வைத்தியர்களும் மற்றும் சுகாதாரத் துறை சார்ந்த அனைவரும் மக்களுக்கு அறுவுறுத்துவது மக்கள் தங்களுடைய நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க யோகப் பயிற்சியினை மேற் கொள்ள வேண்டும் என்பதே.** அதனை வழங்குவதே அருட்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்களின் மனவளக்கலை யோகப் பயிற்சிகள் ஆகும்.

மேலும் இம்முறை (Zoom) இணையத்தளம் மூலம் பயிற்சிகள் இந்தியப் பேராசிரியரால் வழங்கப் பட இருப்பதனால் அனைவரும் இவ்வரிய சந்தர்ப்பத்தினை தவறாது பயன்படுத்தி பயன் பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- எளிய முறை உடற்பயிற்சி
- காயகல்ப்பப்பயிற்சி
- எளியமுறை தியானப்பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சி

காலம் :18.07.2020 சனிக்கிழமை தொடக்கம்24.07.2020 வெள்ளிக்கிழமை வரை
நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை
பயிற்சி வழங்குபவர் : துணைப் பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் அவர்கள்

குறிப்பு:- கொவிட் 19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக பயிற்சிகள் வழங்கப்படுவதால் மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியாளர்களே உள்வாங்கப்படுவர்.

எதிர்வரும் 18.07.2020 சனி மற்றும் 19.07.2020 ஞாயிறு தினங்களில் அகத்தாய்வு 1ம் நிலை பயிற்சியானது காலை 9.00 மணியிலிருந்து மதியம் 1.00 மணிவரை இந்தியா (தமிழ்நாடு) பேராசிரியர் லில்லிபாய் அவர்களால் நடாத்தப்படும்.

தொடர்புகளுக்கு- **யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்**
இல. 81. பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம். தொ.இல:021 222 2772
(3331)

## பொருளாதார...

கொண்டவராக ஜனாதிபதி செயற்படுகிறார். இடம் பெறவுள்ள பொதுத் தேர்தலில் இவ்வாறான இணக்கப்பாடான அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும்.

கோவிட் -19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த ஊரடங்கு சட்டம் நாடு தழுவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டது. இவ்வேளையில் மக்களின் வாழ்க்கை தேவைகளுக்காக பல முறை 5000 ரூபா வழங்கப்பட்டது. ஊரடங்கு சட்டம் இரத்து செய்யப்பட்டதன் பின்னர் மின்சார கட்டணம் தொடர்பில் மக்கள் பிரச்சினைகளுக்க முகம் கொடுத்தார்கள். முன் னர் 5000 மாக செலுத்திய மின்கட்டணம் 9000மாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

பொருளாதாரரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மின்சார கட்டணத்தில் நிவாரணம் வழங்க வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டதை தொடர்ந்து உரிய நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டன. மின்கட்டணத்தில் 25 சதவீதத்தை செலுத்தவே முதலில் தீர்மானிக்கப்பட்டது. பின் னர் அதனையும் செலுத்த மக்கள் மத்தியில் வசதியில்லை என்பதை தெரிந்த பின்னர் பெப்ரவரி மாதத்தில் இருந்து வெளியாகிய கட்டணங்களுக்கு முழுமையாக நிவாரணம் வழங்க அரசாங்கம் தீர்மானித்தது.

மின்சார கட்டணங்களுக்கு நிவாரணம் வழங்குவதால் மாத்திரம் அரசாங்கத்துக்கு 3 பில்லியன் நிதி நட்டமடைகிறது. பொருளாதர நெருக்கடி நிலையில் அதன் சுமைகளை மக்கள் மீது சுமத்த தீர்மானிக்கவில்லை. இத்தீர்மானத்தினால் மக்கள் நன்மையடைவார்கள். மக்கள் மத்தியில் இருந்து அரசியல் செய்வதால் அடிமட்ட கஷ்டங்களை எம்மால் புரிந்து கொள்ள முடியும் என்றார். (ம-3)

## தமிழில்...

தண்டம் விதிக்கப்பட்ட நிலையில் அதற்கான குற்றப் பணத்தினை தபாலகத்தில் செலுத்தியுள்ளார். அதன் போது தபாலக உத்தியோகஸ்தர் பற்று சீட்டை ஆங்கிலத்தில் எழுத முற்பட்ட போது , குறித்த இளைஞன் தனக்கு தமிழ் மொழியில் பற்று சீட்டில் எழுதி தாருங்கள் என கேட்டுள்ளார்.

அதன் போது உத்தியோகஸ்தர் , நாம் ஆங்கிலத்தில் எழுதி கொடுப்பதே வழமை. ஆங்கிலத்தில் தான் எழுதி தருவோம் என கூறியுள்ளார். அதற்கு குறித்த இளைஞன் உங்களின் தாய் மொழி தமிழ் தானே அதே ஒன்று என் தாய் மொழியும் தமிழ் எனவே நீங்கள் தமிழில் எழுதி தாருங்கள் என கோரியுள்ளார்.

அதற்கு அந்த உத்தியோகஸ்தர் அவ்வாறு எழுதி தர முடியாது என கூறிய போதும் தனக்கு தமிழ் மொழியில் எழுதி தந்தால் மாத்திரமே பற்றுசீட்டை வாங்குவேன் என கூறி நின்ற போது மிரட்டும் தொனியில் தமது கடமைக்கு இடையூறு விளைவிக்கின்றீர் என பொலிஸில் முறையிடுவோம் என கூறியுள்ளனர்.

அதற்கும் இளைஞன் அஞ்சாது , தனக்கு தமிழ் மொழியில் எழுதி பற்று சீட்டு தர வேண்டும் என தபாலகத்தில் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்துள்ளார். சுமார் 30 நிமிட காத்திருப்பின் பின்னர் தபாலக உத்தியோகஸ்தர் குறித்த இளைஞனை அழைத்து தமிழ் மொழியில் பற்று சீட்டு எழுதி வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் குறித்த இளைஞன் தெரிவிக்கையில்,

எமது மொழி உரிமையை நாமே காக்க தவறக் கூடாது. இங்குள்ள தமிழ் உத்தியோகஸ்தர்கள் பெரும்பாலும் பற்று சீட்டுக்களை ஆங்கில மொழிகளில் எழுதி தருகின்றார்கள். பற்று சீட்டில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தான் விபரங்கள் கேட்கப்படுகின்றன.

அவ்வாறு இருக்கையில், தமிழ் உத்தியோகஸ்தர்கள் தமிழில் எழுத பின் நிற்கின்றார்கள்.

அரச திணைக்களங்களில் மற்றும் வங்கிகளில் பற்று சீட்டு பெறும் போது , நான் தமிழில் தான் பெற்றுக்கொள்வேன். ஓரிரு இடங்களில் மாத்திரமே தமிழில் எழுதி தந்தார்கள். மற்றைய இடங்களில் ஆங்கிலத்தில் எழுத முற்படும் போதும் , தமிழில் எழுதி தாருங்கள் என கேட்டால் ஒரு தடவை என்னை வித்தியாசமாக பார்த்து விட்டு எழுதித் தருவார்கள். அதற்காக நான் எனது மொழியுரிமையை எங்கும் விட்டுக்கொடுக்கவில்லை. தற்போதைய இளையோர்களும் தமது மொழியுரிமையை விட்டுகொடுக்க கூடாது என தெரிவித்தார். (ம-3)

**மணமகன் தேவை**

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப் பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(3172)

தொடர்பு
Tel : 077 340 5951
Email : engchelvam@gmail.com

# நாட்டிற்குள் ஃபோடோ பயங்கரவாத அமைப்பு ஊடுருவல்

(கொழும்பு)

**துருக்கி நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு அங்கு தற்போது செயலிழந்துள்ள இஸ்லாமிய மத பயங்கரவாத அமைப்பான "ஃபோடோ" அமைப்பு ஸ்ரீலங்கா உட்பட 160 நாடுகளில் இயங்கி வருவதாக இலங்கைக்கான துருக்கி நாட்டின் தூதுவர் ஆர்.தெமன் ஷேகிர்ஜியோலு தெரிவித்துள்ளார்.**

பாடசாலைகள், வர்த்தகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் ஊடாக ஃபோடோ அமைப்பு தனது வலையமைப்பை நிறுவியுள்ளது.

துருக்கியில் நடைபெற்ற இராணுவ சதிப்புரட்சி தோற்கடிக்கப்பட்ட நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் துருக்கி தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஃபோடோ அமைப்பு 1970ஆம் ஆண்டுகளில் தொண்டு நிறுவனமாக துருக்கியில் தனது பணிகளை ஆரம்பித்ததுடன் பின்னர் உலகம் முழுவதும் பாடசாலைகளை நிறுவியது.

ஃபோடோ அமைப்பு வர்த்தக கொடுக்கல்-வாங்கல்கள் மற்றும் அரச கேள்வி மனுகோரல்கள் தொடர்பான செயற்பாடுகளில் தனது தொடர்புகளை ஆரம்பித்த பின்னர், பணச்சலவை, சட்டவிரோத பணப்பரிமாற்றம் மற்றும் ஏனைய நிதி ரீதியான குற்றங்களை வர்த்தகமாக்கி கொண்டது.

இதனையடுத்து அந்த அமைப்பு சீர்குலைப்பு நடவடிக்கைகளுக்கு இந்த நிதியை பயன்படுத்தி வருகிறது. நிறுவனங்கள் மற்றும் வர்த்தகர்களிடம் பெறும் அன்பளிப்புகளை பொதுமக்கள் மத்தியில் நிலைப்பாடுகளை உருவாக்க ஊடக நிறுவனங்களை நிறுவியுள்ளது. துருக்கியில் ஃபோடோ அமைப்பு செயலிழந்துள்ளது. எனினும் வேறு நாடுகளில் தம்து அமைப்பை கொண்டு நடத்த அவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

உலக பொருளாதார மற்றும் உலக அரசியல் அழுத்தங்களை ஏற்படுத்தும் எதிர்பார்ப்பு ஃபோடோ அமைப்புக்கு உள்ளதால், அந்த அமைப்பு இயங்கும் நாடுகளில் அது நேரடியாக பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும்.

ஃபோடோ பயங்கரவாத அமைப்பு செயற்படும் விதம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு அனைத்து தகவல்களும் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த அமைப்பின் இணை நிறுவனங்கள் மற்றும் அவற்றில் செயற்படும் நபர்கள் தொடர்பான சகல தகவல்களும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தனது அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-2)

# நாடளாவிய ரீதியில் விசேட சுற்றி வளைப்பு

## 75 ஆயிரத்து 531 பேர் கைது

## 172 துப்பாக்கிகள் மீட்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 39 நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த விசேட சுற்றிவளைப்பின் போது பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் 75 ஆயிரத்து 531 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

திட்டமிட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவினர் விசேட சுற்றிவளைப்பில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

இதற்கமைய கடந்த மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை ஆறு மணிமுதல் நேற்று முன்தினம் புதன்கிழமை வரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, சட்டவிரோத ஆயுதங்கள், போதைப் பொருட்கள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்தமை தொடர்பிலும் பிடியாணை உத்தரவு வழங்கப்பட்டிருந்தவர்கள் மற்றும் பல்வேறு குற்றச் செயலகளில் தொடர்புடையதாகக் கூறப்படும் நபர்களே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது போதைப்பொருள் வைத்திருந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட 17 ஆயிரத்து 301 சந்தேக நபர்களுள் 9 ஆயிரத்து 648 சந்தேக நபர்கள் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 13 கிலோ 361 கிராம் 236 மில்லி கிராம் தொகை ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

கஞ்சா போதைப் பொருளுடன் 7 ஆயிரத்து 64 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களிடமிருந்து 680 கிலோ 743 கிராம் 63 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இதேவேளை ஐஸ் போதைப் பொருளுடனும் 589 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 4 கிலோ 266 கிராம் 91 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபானம் தொடர்பில் இடம்பெற்ற சுற்றிவளைப்புகளில் 14 ஆயிரத்து 583 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து 4 இலட்சத்து 68 ஆயிரத்து 184 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை வைத்திருந்தமை தொடர்பில் 166 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஆயுதங்கள் வைத்திருந்ததாக 154 பேரும், வெடிமருந்துகளை வைத்திருந்ததாக 12 பேருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 48 குழல் 12 ரக துப்பாக்கிகளும் 29 உள்நாட்டு துப்பாக்கிகளும் 74 ரிபிடர் ரக துப்பாக்கிகளும் 2 வேறுவகை துப்பாக்கிகளும் 5 கைத்துப்பாக்கிகளும் 11 ரி-56 ரக துப்பாக்கிகளும் ரி-81 ரக துப்பாக்கி ஒன்றும் ரிவோல்டர் ரக துப்பாக்கிகள் இரண்டும் 838 தன்னியக்க தோட்டாக்களும் மற்றும் 7 வாள்களும் 3 கத்திகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதேவேளை 367 கிராம் தொகை வெடி மருந்து, 23 டெட்டனேட்டர்கள் மற்றும் 22 கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 15 ஆயிரத்து 152 சந்தேக நபர்களும் வேறு வகையான குற்றச் செயல்களை புரிந்த 28 ஆயிரத்து 329 பேரும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதன் நோக்கிலே பொலிஸார் இந்த விசேட சுற்றிவளைப்பை முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## பொதுத் தேர்தல் காலகட்டத்தில்

# மனித உரிமை மீறல்களை கண்காணிக்க விசேட பிரிவு

(கொழும்பு)

பொதுத்தேர்தலின் போது இடம்பெறக்கூடிய மனித உரிமை மீறல்கள் பற்றிய முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அவை குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்குமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட பிரிவொன்றை நிறுவியுள்ளது.

பொதுத்தேர்தல் காலகட்டத்தில் அதனுடன் தொடர்புடைய வகையில் அரச அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றிய முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலேயே புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் விசேட அலகினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமக்கள் 24 மணிநேர துரித சேவையான 1996 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மனித உரிமை மீறல்கள் குறித்த முறைப்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நிறுவப்பட்டுள்ள விசேட பிரிவிற்கு செய்ய முடியும் என்றும் மனித உரிமை மீறல்கள் பற்றிய முறைப்பாடுகளை எழுத்துமூலமாக முன்வைக்க விரும்பும் பட்சத்தில் அலகுக்குப் பொறுப்பான அதிகாரி, தேர்தல் முறைப்பாட்டைப் பெற்றுக்கொள்ளும் அலகு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலக்கம் 14, ஆர்.ஏ.த.மெல் மாவத்தை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என்றும் அத்தோடு அந்த எழுத்து மூலமான முறைப்பாடுகளை 011 250 5574 என்ற தொலைநகல் இலக்கத்திற்கு அல்லது iihrcsrilanka@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்க முடியும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஜ-4)



# யுத்தத்தைப் போன்று கொரோனா வைரஸை கையாள முடியாது - சம்பிக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)



**கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாம் அலைக்கான ஆரம்ப அறிகுறிகள் தற்போது தோன்றியிருக்கின்றன. இதற்குக்காரணம் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் சுகாதாரசேவை உத்தியோகத்தர்களிடம் பொறுப்புக்கள் கையளிக்கப்படாமையே ஆகும். பாதெனியவின் தலைமையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரை போர்க்களத்திற்கு அனுப்பியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க கேள்வி எழுப்பினார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அது மாத்திரமன்றி நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் தலைதூக்க ஆரம்பித்துள்ளமைக்கு ஜனாதிபதியும், பிரதமருமே பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டை நிர்வகிப்பதற்கென்று ஒருமுறை இருக்கிறது. தற்போது கொரோனா வைரஸ் நாலாபக்கமும் பரவிக்கொண்டு வருகிறது. இந்த நெருக்கடி நிலையை எதிர்கொள்வதில் சுகாதாரத்துறை சார்ந்த அதிகாரிகளுக்கும், வைத்திய நிபுணர்களுக்கும், ஏனைய சுகாதாரசேவை உத்தியோகத்தர்களுக்கும் முதலிடம் வழங்கப்படாமல் பொருத்தமற்றவர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டமையே இதற்குக் காரணமாகும்.

நாட்டில் மூன்று தசாப்த கால யுத்தமொன்று நடைபெற்றது. வைத்திய நிபுணர் அநுருத்த பாதெனியவின் தலைமையில் அரசவைத்திய அதிகாரிகள் சங்கத்தினரை யுத்தகளத்திற்கு அனுப்பியிருந்தால் இப்போது யுத்தம் முடிவிற்கு வந்திருக்குமா? அதேபோன்று நாட்டில் தொற்றுநோயொன்று பரவும் போது அதனைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவிடம் பொறுப்பை வழங்கக்கூடாது.

மாறாக வைத்திய நிபுணர்கள், சுகாதார அதிகாரிகளிடமே அந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும். யுத்தம் செய்வதற்காகவே சவேந்திர சில்வா இருக்கிறார். எனினும் கொரோனா வைரஸ் பரவல் என்பது யுத்தத்தைப் போன்று கையாளப்படக் கூடியதன்று.

இதைக்கூடப் புரிந்து கொள்ள முடியாமல்தான் இன்றளவிலே ராஜபக்ஷக்கள் கொரோனாவிற்கு நாட்டைப் பலி கொடுத்திருக்கிறார்கள்.

நாட்டிலேற்பட்ட முதலாவது கொரோனா வைரஸ் பரவல் அலைக்கு ஜனாதிபதியும், பிரதமருமே பொறுப்புக்கூற வேண்டும். உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் பரவிய போது விமானநிலையங்களை மூடவேண்டும் என்று சிந்திக்குமளவிற்கு ஆற்றலற்ற, அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் தேர்தலை விரைந்து நடத்துவதற்குத் திட்டமிட்ட அவர்களிருவருமே அதிகமான காலம் மக்களை வீடுகளில் முடக்கியமைக்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

அதேபோன்று தற்போது மீண்டும் ஏற்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் தொற்றுக்கும் அவர்கள் இருவருமே பொறுப்பாளிகளாவர். மறைந்த முன்னாள் அமைச்சர் தொண்டமானின் இறுதி ஊர்வலத்தின் போது ஒட்டுமொத்த தனிமைப்படுத்தல் சட்டங்களையும் மீறி செயற்பட்டார்கள்.

அதனைத் தடுக்காமலிருந்துவிட்டு, இப்போது தனிமைப்படுத்தல் சட்டங்களைப் பின்பற்றுமாறு அனில் ஜாசிங்கவினால் எமக்குக்கூற முடியுமா? பொலிஸ் ஊடகப்பேச்சாளரால் மக்களுக்கு அறிவுறுத்த முடியுமா? எனவே கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாம் அலைக்கு ஜனாதிபதியும் பிரதமருமே முழுவதுமாகப் பொறுப்பேற்க வேண்டும் என சம்பிக்க தெரிவித்தார். (ஜ-2)

## வடக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்ற அரசாங்கம் உரிய வழிமுறை



(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு குறிப்பிடும் தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மாற்று நடவடிக்கைகளை முன்வைக்கவில்லை.

வடக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்ற அரசாங்கம் உரிய வழிமுறைகளை பொதுவாக ஏற்படுத்திக் கொடுக்கும் என கைத்தொழில் மற்றும் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கைத்தொழில் வளங்கள் முகாமைத்துவ அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் உள்ள மர முந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 6 ஆயிரம் ஏக்கர் காணி நிலப்பரப்பில் 200 ஹெக்டேயர் நிலப்பரப்பு வடக்கு மாகாணத்தில் வாழும் விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்தி சபையும், மர முந்திரிகை கூட்டுத்தாபனமும் இணைந்து முன்னெடுக்கும் செயற்றிட்டத்திற்கான இணக்கப்பாட்டு ஒப்பந்தம் அமைச்சர் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

வடக்கு மாகாண மக்களின் பிரதான ஜீவனோபாயமாக விவசாயம் காணப்படுகிறது. காணி இல்லாத பிரச்சினைகளின் காரணமாக பலர் நெருக்கடி நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அமைச்சரின் வழிகாட்டலின் பெயரில் வடக்கு மாகாணத்தில் வன்னி பிரதேசத்தில் மர முந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணியில் மர முந்திரிகை பயிர்ச்செய்கையுடன் உபரி பயிர்ச்செய்கையினை 4 வருட காலத்திற்கு முன்னெடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் பகுதியில் உள்ள முசலி பனை அபிவிருத்தி சபையின் விவசாய சங்கம், யாழ்ப்பாணத்தில் உள்ள வருணி விவசாய சங்கம் ஊடாக இந்த அபிவிருத்தி திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்விரு சங்கத்தின் ஊடாகவும் விவசாயிகள் விண்ணப்பம் செய்ய முடியும். அத்துடன் விவசாய பயிர்ச்செய்கைக்கு தேவையான கடனுதவியை வழங்க மக்கள் வங்கி, சமுர்த்தி வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகிய வங்கிகள் இணக்கம் தெரிவித்துள்ளன. வடக்கு மக்களுக்கு அபிவிருத்திப் பணிகளை அரசாங்கம் முழுமையாக முன்னெடுக்கும். என அவர் உறுதிபடத் தெரிவித்தார். (ஜ-2)

## கொரோனாத்தொற்று தீவிரம் பரீட்சைகள் பிற்போடல்

(கொழும்பு)

நாட்டில் அதிகளவான கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், சில முக்கிய பரீட்சைகளை ஒத்திவைக்க பரீட்சைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நடத்த திட்டமிடப்பட்ட பல பரீட்சைகளே இவ்வாறு பிற்போபட்டுள்ளன. இதன்படி,

- இலங்கை தொழில்நுட்ப சேவையின் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கான முதல் துறை பரீட்சை - 2017 (2020)
- இலங்கை அதிபர்கள் சேவையின் 2 ஆம் வகுப்பில் உள்ள அதிகாரிகளுக்கான திறன் பட்டி பரீட்சை - 2019 (2020)
- இலங்கையின் ஓரியண்டல் மொழிகளின் பரீட்சை - 2019 (2020)
- இலங்கையின் ஓரியண்டல் மொழி உதவி நிறுவன பரீட்சை - 2019 (2020) ஓரியண்டல் பண்டித மத்திய பரீட்சை
- இலங்கையின் ஓரியண்டல் மொழிகள் கூட்டுறவு சங்கத்தின் பரீட்சை - 2019 (2020) ஓரியண்டல் அறிஞர்களின் இறுதிப்பரீட்சை (புதிய / பழைய)

மேற்கண்ட பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதுடன், அது குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணைக்குழு மேலும் அறிவித்துள்ளது. (ஜ-4)

## உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சைகள் குறித்த திகதிகள் அறிவிப்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரம், புலமைப் பரிசில் பரீட்சைகள் ஆகியவற்றிற்கான குறித்த தினங்கள் அறிவிப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். இரண்டு பரீட்சைகளையும் நடத்துவதற்கான திகதிகள் தொடர்பில் நேற்று அறிவிக்கப்படவிருந்தது.

எனினும், கொவிட்-19 தொற்றை கருத்திற் கொண்டு, திகதிகளை தற்போது அறிவிக்காதிருப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஜ-4)

# சேற்றை வாரியிறைக்கும் பிரசாரம்



## உடனடியாக நிறுத்தும்படி ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

**நாட்டின் சில பகுதிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் பொதுஜன பெரமுனவினதும் சில உறுப்பினர்கள் பரஸ்பரம் சேற்றை வாரியிறைக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பது குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவலை வெளியிட்டதுடன் உடனடியாக நிறுத்துமாறு உத்தரவிட்டார்.**

குறிப்பாக கம்பஹா, பொலநறுவை மாத்தறை மாவட்டங்களில் சுதந்திரக்கட்சியினரும் பொதுஜன பெரமுனவினரும் கடுமையான குற்றச் சாட்டுக்களை பரஸ்பரம் முன் வைத்து வருவது குறித்து ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் கவலை வெளியிட்டுள்ளார்.

பரஸ்பரம் சேறுபூசும் நடவடிக்கைகள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது என தெரிவித் துள்ள ஜனாதிபதி இந்த வகையான அரசியலை முன்னெடுப்பவர்கள் அதனை உடனடியாக நிறுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (ஐ-4)

# தமிழ் அரசியல் கைதிகளை பிணையில் விடுவியுங்கள்

## மாவை. ஜனாதிபதியிடம் வலியுறுத்து

(கொழும்பு)

பயங்கரவாதத்தடைச் சட்டம் அல்லது அவசரகாலச் சட்டத்தின் கீழ் கடந்த 10 - 24 வருட காலமாகக் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் பலர் சிறைகளில் உள்ளனர். தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலையில் சிறைகளிலுள்ள அரசியல் கைதிகளின் உளநிலையையும், அவர்களது அடிப்படை மனிதவுரிமைகளையும் கருத்திற்கொண்டு வெளிநாடுகளைப்போன்று அவர்களை பிணையில் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.



கொரோனா வைரஸ் வேகமாகப் பரவிவரும் நிலையில் சிறைகளில் பலவருட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை பிணையில் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். (ஐ-4)

## பாடசாலைகளுக்கு இந்தியா நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் உள்ள பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு இந்திய அர்சாங்கம் நிதியுதவியளிக்க இணக்கம் வெளியிட்டுள்ளது. அமைச்சர் டலஸ் அழகப் பெருமவிற்கும், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவிற்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. (ஐ-4)




# குருதிக் கொடையாளர்களுக்கு!

(குப்பிழான்)

யாழ்.குடாநாட்டில் கடந்த ஒரு வார காலமாக ஏ பொசிட்டிவ் வகை குருதி வகைக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப் பதிகாரி வைத்திய கலாநிதி டாக்டர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இதனைக் கருத்திற் கொண்டு ஏ பொசிட்டிவ் (A+) வகை குரு தியையுடைய குருதிக் கொடையாளர்கள் உடனடியாக முன் வந்து குருதிதானம் வழங்கி உயிர் காக்கும் உன்னத பணியில் இணைந்து கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குருதித்தட்டுப்பாடு தொடர்பில் நேற் றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிகளில் குருதிக் கொடையாளர்கள் நேரடியாகச் சென்று குருதி வழங்க முடியும்.

தற்போது நடமாடும் இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து நடத்துவது குறைந்துள்ளதுடன் குருதிக் கொடையாளர்கள் நேரடியாக இரத்த வங்கிகளுக்கு வருகை தந்து இரத்த தானம் வழங்குவதும் குறைவடைந்துள்ளது.

தற்போது ஏ பொசிட்டிவ் (A+) வகை குருதிக்கு மாத்திரமல்லாமல் ஏனைய குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய நிலைமை காணப்படுகின்றது. எனவே, பொது அமைப்புக்களும் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் நடமாடும் இரத்ததான முகாம்களை நடத்த முன்வர வேண்டும்.

இவ்வாறான நடமாடும் இரத்த தான முகாம்களை நடத்துவதற்கு இரத்த வங்கிகள் எப்போதும் தயார் நிலையிலேயே உள்ளன. ஆகவே, அனைத்துக் குருதிக் கொடையாளர்களும் இதனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார். (4-5-18)




# போதனாசிரியர்களிற்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் முதியோர் பராமரிப்பாளர் கற்கைநெறி மற்றும் ஜப்பான் மொழியியல் கற்கைநெறி கற்பிப்பதற்கான போதனாசிரியர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிபரக் கோவை, சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் அனுபவச்சான்றிதழ்கள் என்பவற்றை உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, இல.12/4, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 24.07.2020 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாணம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (5)

# மின் ஒழுக்கு காரணமாக காப்புறுதி நிறுவனத்தில் தீ

(யாழ்ப்பாணம்)



யாழ்.நகரில் உள்ள காப்புறுதி நிறுவனம் ஒன்றில் நேற்று முன்தினம் மின் ஒழுக்குக் காரணமாக தீ பற்றிக்கொண்டது.

யாழ்.நகரில் அமைந்துள்ள காப்புறுதி நிறுவனம் ஒன்றில் நேற்று முன்தினம் முன்பக்கம் உள்ள மின் இணைப்பு சாதனங்களில் தீப்பரவல் ஏற்பட்டது. இதனையடுத்து ஊழியர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டதுடன் உடனடியாக தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். இதேவேளை குறித்த கட்டடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. (5)

# விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க அமைச்சரவை அனுமதி - டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வீசிய அம்பன் புயலால் பாதிக்கப்பட்ட வாழை மற்றும் பப்பாளி உற்பத்தியாளர்களுக்கு நட்டஈடு வழங்கவதற்கு விசேட அமைச்சரவைப் பத்திரமொன்றை தாக்கல் செய்யுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அமைச்சரவை கோரியுள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருந்தார்.

இதையடுத்தே நட்டஈட்டை வழங்கவதற்கு விசேட அமைச்சரவை பத்திரமொன்றை தாக்கல் செய்யுமாறும் அமைச்சரவை அனுமதி அளித்தது.

அதனடிப்படையில், அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாத இறுதியில் யாழ்.மாவட்டத்தில் வீசிய அம்பன் புயலால் சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட வாழைச் செய்கை மற்றும்பப்பாசிசெய்கை முற்றாக அழிக்கப்பட்டிருந்தது.

இதனால் குறித்த பயிர்களைப் பயிரிட்ட விவசாயிகள் பெரும் பொருளாதார நட்டத்தை எதிர்கொண்டிருந்தனர். இதையடுத்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் குறித்த விவசாயிகள் தமது பயிரழிவுக்கான நட்டஈடுகளை பெற்றுத்தருமாறு கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் மே மாதம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது குறித்த பயிரழிவுகளுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை முன்வைத்திருந்தார். இதையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை குறித்த அம்பன் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க அனுமதி அளித்திருந்தது. ஆனாலும் இதற்கான இழப்பீடுகளை வழங்குவதற்கு விவசாய அமைச்சு மற்றும் அனர்த்தமுகாமைத்துவ அமைச்சு ஆகியன நிதி இல்லை என தெரிவித்திருந்தன.

இதையடுத்து குறித்த நட்டஈட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மீண்டும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் கோரியிருந்தார். இதையடுத்து நட்டஈடு வழங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்தார்.

இந்நிலையிலேயே நேற்று அமைச்சரவை பத்திரமொன்றை தாக்கல் செய்ய அனுமதி அளித்துள்ளது. (4-5)

# நல்லூர் திருவிழாவிற்கு குறைந்தபட்சம் 300 பேரை அனுமதிக்குமாறு

## யாழ்.மாநகர சபை பதில் முதல்வர் கடிதம்

(யாழ்ப்பாணம்)



நல்லூர் முருகன் ஆலயத் திருவிழாவின்போது பக்தர்கள் 300 பேரையேனும் ஆலய வளாகத்துக்கு அனுமதிக்க ஆவன செய்யுமாறு கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, யாழ்.மாநகர சபை பதில் முதல்வர் துரைராசா ஈசன் நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா ஜூலை 24 ஆம் திகதி தொடங்கி ஒகஸ்ட் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இம்முறை பக்தர்களின் பங்கேற்புடனோ அல்லது பங்கேற்பு இன்றியோ இந்துமத குருமார்கள் மற்றும் ஆலய ஊழியர்களின் உதவியுடன் வழமைபோன்று திருவிழா இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார அதிகாரிகள், பக்தர்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டிய சுகாதார வழிகாட்டல்கள் குறித்து அறிவுறுத்தியுள்ளனர்.

கோயிலுக்குள் அதிக பக்தர்களை அனுமதிப்பது நோய் பரவுவதற்கு வழிவகுக்கும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தொற்று நோய் நெருக்கடி காரணமாக சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய திருவிழாக்களில் மட்டுப்படுத்தப்பட்ட தொகை பக்தர்களே ஆலயத்துக்குள் அனுமதிக்கப்படுவர்.

அதற்கேற்ற வகையில் திருவிழாக் காலங்களில் 300 பேருக்கும் மேற்படாத தொகையில் பக்தர்களை ஆலய வளாகத்துக்கு அனுமதிக்க உதவுமாறு ஆலயத்தின் பக்தர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். உங்களது விரைவான பதிலுக்காகக் காத்திருக்கிறேன் எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-8)

# புதிய உறுப்பினர்கள் நியமனம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபைக்கு புதிய உறுப்பினர்கள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, கலாநிதி ராணி ஜயமஹா மற்றும் சமந்த குமாரசிங்க ஆகியோரே நிதிச் சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பு பேரவையின் அனுமதியுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஜ-4)



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு நன்கொடை வழங்கியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் குறித்த வைத்தியசாலையின் பதில் வைத்திய அதிகாரி வே.கமலநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (படம்:- கரணவாய் செய்தியாளர்)

# நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

## பெறுகைக்கான அழைப்பு

### நந்தவனம் பாதுகாப்பு இல்லம் கிளிநொச்சிக்கான புதிய உலர் உணவுப் பொருட்கள் விநியோகமும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகமும்-2020

1. வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் பெறுகை குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த புதிய உலர் உணவுப் பொருட்கள் மற்றும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| பெறுகை விடயம் | பெறுகை இல |
|---|---|
| புதிய உலர் உணவுப் பொருட்கள் விநியோகமும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகமும் 2020 | NP/30/20/05/Fo – Sup/Na/ 2020 |

2. விலைக் கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கான வியாபார பதிவுடைய ஒரு நபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

3. பொருத்தமான உத்தரவாதமுறி பெறப்பட்டு பெறுகையுடன் இணைக்கப்படல் வேண்டும். உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும். உத்தரவாத உத்தரவாத முறி பணம் ரூபா 50,000.00 ஐ மத்திய வங்கியினால் அனுமதிக் கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

4. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர் இத்திணைக்களத்தில் கிடைக்கும் **"Application for Bid Documents"** என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா.1000/= இனை காசாகச் செலுத்தி தமிழ்மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் **17.07.2020** தொடக்கம் **07.08.2020** வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 14.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் **30.07.2020** காலை 11.00 மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக் கேள்வி கள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ள லாம்.

5. விலைக் கேள்விகள் **10.08.2020** ஆம் திகதி 11.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்தில் ஆணையாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் 10.08.2020 ஆம் திகதி 11.30 மணிக்கு விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

6. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல. 021 222 8321).

7. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகள் நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**இ.குருபரன்**
**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,**
**நன்னடத்தை பாதுகாவல்**
**மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்**
**வ.மா, மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்.**

(C-9904)


நாடாளுமன்றத் தேர்தல் - 2020
யாழ், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



6 க.வி.விக்னேஸ்வரன்
2 க.அருந்தவபாலன்

தகவுடைத்தலைமை
தன்னாட்சி அரசியல்
தற்சார்பு பொருண்மியம்

X 2 6

(C-954)

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரோகினி 1
கி.பா: செவ் 6 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. நிரந்தர வர்த்தகம் (சொந்தம்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10974

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 3
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 6'1"
தகைமை/தொழில்: பட்டதாரி தனியார் வங்கி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10975

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: மகம் 4
கி.பா: 55 ½ செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. சுவிஸில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: கனடா நிரந்தர வதிவிட உரிமம் பெற்ற பெண்
தொ.இ: B/10980

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த.
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10982

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: விசாகம் 3
கி.பா: செவ் 1 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி.
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர் மட்டும்
தொ.இ: G/8481

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 40 ¼ செவ் 9 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: MBBS, வைத்தியர்
எதிர்பார்ப்பு: மருத்துவர்
தொ.இ: G/8490

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 13 ¾ செவ் 11 இல்
உயரம்: 5'6"
த்கைமை/தொழில்: B.Sc IT, Quality Engineering Associate (Foregin firm)
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: G/8503

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா: 48 செவ் 9 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியை
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர் பட்டதாரி விரும்பத்தக்கது.
தொ.இ: G/1108

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



பெரிய பண்டிவிரிச்சான் பங்கின் தாய்க்கோயிலான புனித மரியகொறற்றி ஆலயத் திருவிழா நேற்று முன்தினம் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளாரின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருவிழா திருப்பலியில் புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்வியகத்தின் இயக்குநர் அருட்தந்தை டெஸ்மன் குலாஸ் , மறைமாவட்ட அன்பியம், பாப்பிறை சபைகளின் இயக்குநர் அருட் தந்தை சவுல் நாதன் மற்றும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் கொண்டனர்.

(படங்கள்:- மன்னார் செய்தியாளர்)

# பேருந்து-டிப்பர் விபத்து ஒருவர் படுகாயம்



(முறிகண்டி)

முன்னால் சென்ற பேருந்தை பின்னால் சென்ற டிப்பர் வாகனம் மோதியதில் பேருந்தை பயணி ஒருவர் காயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேசசெயலகத்திற்கு உட்பட்ட கரந்தாய் சந்தி பகுதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக் காலை கொழும்பில் இருந்து யாழ் நோக்கி வந்த தனியார் பேருந்தை கிளிநொச்சிப் பகுதியில் இருந்து வந்த டிப்பர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பேருந்தின் பின் பகுதியில் மோதியதில் பேருந்தில் பயணித்த ஒருவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் அம்புலன்ஸ் மூலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார். விபத்து தொடர்பாக மேலதிக விசாரணையை பளை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் டிப்பர் வாகனத்தின் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். (4-5-100)

# காட்டுக்குச் சென்ற மாணவர்களிடம் பொலிஸார் விசாரணை

(புனிக்கன்குளம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வைத்தியத்துறை மாணவர்கள் 9 பேர் நேற்று முன்தினம் நண்பகல் வேளையில் உடையார்கட்டு வனப்பகுதிக்கு சென்ற நிலையில் அங்கு அவர்கள் காணாமல் போயிருந்தனர்.

அதனை தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பில் பொலிஸார் இராணுவத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் இராணுவத்தினர் பொலிஸார் மற்றும் வனவள திணைக்கள அதிகாரிகள் இணைந்து நடத்திய தேடுதலின் போது அவர்கள் முத்தையன்கட்டு கொய்யாகுளம் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டனர்.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-281)

# வன்னியில் 90 வீதம் வாக்களிப்பு பதிவு

(நெளுக்குளம்)

வன்னி மாவட்டத்தில் தேர்தல் முறைப்பாடுகள் 30 கிடைக்கப்பட்டுள்ளன. சிறிய சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகளே அதிகளவில் இடம்பெற்றுள்ளதுடன் 90 வீதமான தபால் வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகரும் மாவட்ட அரசாங்க அதிபருமான சமன்பந்துலசேன தெரிவித்தார்.

நேற்று அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேட்பாளர்கள் விளம்பரப் படுத்தப்பட்ட வாகனங்களில் செல்லும்போது குறித்த வாகனத்தில் சாரதிக்கு அருகில் வேட்பாளர் அமர்ந்திருக்க வேண்டும் எனவும் தபால் மூலமாக வாக்களிக்கத்தவறியவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் ஒழுங்கு செய்யப்படுகின்ற தபால் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிக்க முடியும் எனவும் தெரிவித்தார். (4-5-299)

# காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு





(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்றுக்காலை இடம் பெற்றது.

வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களிற்கான காளாஞ்சி மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன. (ஜ-33)

# சந்தேகத்திற்கிடமான பொருட்களைத் தேடி நீதவான் முன்னிலையில் அகழ்வு

(மன்னார்)

மன்னார் பேசால்லை கடற்கரை வீதியில் அமைந்துள்ள வீட்டிற்குள் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் இருப்பதாக நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை 3.45 மணியளவில் மன்னார் பதில் நீதவான் இ.கயாஸ் பெல்டானோ முன்னிலையில் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த அகழ்வு நடவடிக்கைகளின் போது பொலிஸ் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

அகழ்வுப்பணி நீண்ட நேரம் இடம்பெற்ற போதும் எவ்வித பொருட்களும் கிடைக்கவில்லை. குறிப்பாக கடந்த சில மாதங்களாக பேசாலை பகுதி யில் இவ்வாறான சந்தேக பொருட்கள் இருப்பதாக கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் பல இடங்களில் அகழ்வுப்பணி இடம்பெற்ற போதும் குறித்த பகுதிகளில் எதுவித பொருட்களும் கிடைக்கவில்லை என்பது குறிப்படத்தக்கது. (4-5-285)

# வடமாகாண கிரிக்கெட் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சும் வடமாகாண கல்வி , விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து வடமாகாணத்தில் கடின பந்து கிரிக்கெட் அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக கடந்த 8ஆம், 9ஆம்,10ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களில் வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் வலயக்கல்வி அலுவலகங்களில் கிரிக்கெட் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றதோடு அமைச்சின் அதிகாரிகளினால் பாடசாலை விளையாட்டு மைதானங்கள் பார்வையிடப்பட்டு வளங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடல்களில் வடமாகாண கல்வி விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இளங்கோவன், இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டு அபிவிருத்தி பிரிவின் உதவிப்பணிப்பாளர் சிறி ரஜீவன், வடமாகாண உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ராஜசீலன், இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் நிஷாந்தன், இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் பிரதிநிதி அத்தப்பத்து ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4)

# இராசிபலன்

17.07.2020

ஆடி 02, வெள்ளிக்கிழமை,
துவாதசி பின்னிரவு 12.02 மணிவரை
ரோகினி முன்னிரவு 8.32 மணிவரை
சுபநேரம் 6.00-7.30 மணிவரை
இராகுகாலம் 10.30-12.00 மணிவரை
சந்திராஷ்டமம் விசாகம், அனுசம் வளவன்

**மேஷம்** — எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத் திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** — எந்தவொரு வேலையையும் நாளை யென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத் தேவை கள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**மிதுனம்** — விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப் புணர்வுடன் நடந்து கொள்வது நல்லது, தொழில் ரீதியாக யாராவது உங்களிடம் உதவி கேட்டு வரலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்** — காலைநேரத்திலேயே கலகலப்பான செய் திகள் வந்து சேரலாம், வருமானம் பெருகி வளம் காண்பீர்கள், குடும்பத்தில் மகிழ் ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** — முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் நாள், உற்ற நண்பர்கள் உறு துணையாக இருப்பர், வெளியூர்த் தொடர் புகள் அனுகூலம் தரும், போசன சுக முண்டு.

**கன்னி** — மனக்குறை தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக் கும் வாய்ப்புண்டு, தேடிச் சென்றவர்கள் நாடி வந்து ஒத்துழைப்பு வழங்குவர்.

**துலாம்** — பொது வாழ்வில் வீண்பழிகள் ஏற்ப டாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், வரவும்- செலவும் சமமா கும் நாள்.

**விருச்சிகம்** — தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், செய் தொழில் மேன்மையுண்டு, குடும் பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** — இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின் னணியாகச் செயற்படுவர், வருமானம் திருப்தி தரும்.

**மகரம்** — வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், செய்தொழி லில் மேன்மையும் உயர்வும் கிட்டும், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**கும்பம்** — செய்தொழிலில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், உறவினர் வழியில் மன திற்கினிய சம்பவமொன்று இடம் பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** — குடும்பத்தினரின் உங்களின் குண மறிந்து நடந்து கொள்வர், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளா தார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

சினம் கூர்மையான கத்தி போன்றது

# முகக்கவசங்கள் அணிவது முக்கியம்

## பொது இடங்களில்

# சளி வெளியேற்றுவதைத் தவிருங்கள்

### சுவாச நோய் தொடர்பான வைத்திய நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

முகக்கவசங்களை அணி வதன் மூலமாக கொரோனா வைரஸ் தொற்றாளர்களிடம் இருந்து ஏனையோருக்கு பரவு வதை குறைத்துக்கொள்ள முடி யும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை சுவாச நோய் தொடர்பான வைத்திய நிபுணர் கள் சங்கம் இதனை அறிவு றுத்தியுள்ளது. குறைவான அறி குறிகள் அல்லது அறிகுறிகள் அற்ற நிலையிலும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக் கக்கூடும் என சங்கத்தின் ஆய் வுப் பணிப்பாளர் துஷ்யந்தர மெதகெதர தெரிவித்துள்ளார். இதனால் முகக்கவசம் அணி வது டன்சமூக இடைவெளியைப்பேணு மாறும், பொதுமக்கள் அதிகம் உள்ள இடங்களில் சளியை வெளி யேற்றுவதை தவிர்த்துக் கொள்ளு மாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை வெவ்வேறு நோய் நிலைமைகளினால் அவ தியுறும் நோயாளர்களும் இந்த அறிவுறுத்தலை பின்பற்றுவது உயிர் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்ள உதவும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# கல்முனை தமிழ் உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தி தருவதாக ஞானசாரர் வாக்குறுதி



(கல்முனை)


கல்முனை தமிழ்ப் உப பிரதேச செயலகத்தை இவ்வா ட்சியில் பெற்றுத்தருவதாக பொது பலசேனா அமைப்பின் செயலா ளர் கலகொட ஞானசார தேரர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பகுதிக்கு தனிப் பட்ட விடயமாக நேற்று முன் தினம் இரவு சென்றிருந்த நிலை யில் அங்கு சென்ற தமிழ் தேசியக்கூட்டமைப்பின் கல் முனை மாநகர சபை உறுப்பினர் ஒருவர் மறித்து கல்முனை உப பிரதேச செயலகம் தொடர்பில் கடந்த கால வாக்குறுதி என்ன வானது என கேள்வி எழுப்பி னார்.

மாநகர சபை உறுப்பினர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் கல்முனை தமிழ் உப பிர தேச செயலகத்தை இவ்வாட்சி யில் தரம் உயர்த்தி தருவதாகவும் எனவே எதிர்பார்த்து காத்திருக் குமாறும் உறுதியளித்தார். (ஜ-4)

# அதியுச்ச அதிகாரப் பகிர்வு தமிழருக்கே

## விக்கிரமபாகு கடும் அழுத்தம்



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு அதியுச்ச அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண் டும். இதனை மையப்படுத்தியதா கவே புதிய அரசமைப்பு இயற்றப்பட வேண்டும் என நவசமசமாஜக் கட்சியின் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட வேட்பாளருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரி வித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டமாகவே 13 ஆவது திருத்தச் சட்டம் முன்வைக் கப்பட்டது. ஆனால், குறித்த சட்டத்தில் இருந்த அதிகாரங்கள் முழுமையா கப் பகிரப்படவில்லை.

பொலிஸ் மற்றும் காணி அதிகா ரங்கள் தடுக்கப்பட்டன. எனவே, 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமை யாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருக்கின்றது.

ஆனால், அதியுச்ச அதிகாரப் பகிர்வைத் தடுப்பதற்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதை இலக்காகக்கொண்டும் புதிய அரசமைப்பு இயற்றப்பட வேண் டும் என்ற கருத்து ராஜபக்ஷ தரப்பில் இருந்து வந்துள் ளது.

இதனுடன் எமக்கு உடன்பட முடியாது.

அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். எந்தத் தரப்பு புதிய அரசமைப்பை இயற்றினாலும் கூட அதில் அதிகாரப்பகிர்வு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

புதிய அரசமைப்பை இய ற்றுவதற்குக் காலம் எடுக்கு மானால் அதன் முதற் கட்டமாக 13ஆவது திருத்தச் சட்டம் முழு மையாக நடைமுறைப்படுத் தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (ஜ-4)


## முதலாம் ஆண்டு நிறைவில்

பிறப்பு 1943 - 01 - 08



இறப்பு 2019 - 07 - 17

அமரர். பிரான்சிஸ் சேவியர் சிறிதேவி

இரக்கம் நிறைந்த ஆண்டவரே
உம் அழைப்பை ஏற்று
உம் பாதம் வந்திருக்கும் அம்மாவை
உம் எல்லையற்ற அன்பினால் நனைத்து
உம் நித்திய அரவணைப்பில்
வைத்திருக்கிறீர் என நம்புகின்றோம்.

அன்பின் அம்மா உங்களது
அளவுகடந்த அன்பையும்
அடுத்தவர் மீது கொண்ட கருணையையும்
நாம் என்றுமே மறவோம்

(3324)

987, வளன்புரம்,
கொழும்புத்துறை.

மகன்

# 1921 முதல் இன்று வரை வடமாகாண பாராளுமன்றத் தேர்தல்களும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும்

07

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



அதே நேரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF / ENDLF / EPRLF / TELO) 3 இடங்களை வென்றது. யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட 1989ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் அட்டவணை-13 மற்றும் 14இல் காட்டப்பட்டுள்ளன.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சி, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) ஆகியவை போட்டியிட்டபோதும் எந்தவொரு ஆசனத்தையும் பெறவில்லை.

தேர்தல் முடிவுகளை பழைய தேர்தல் முறையில் பார்க்கும் போது 1989 ஆம் ஆண்டுத் தேர்தலில் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 11 தொகுதிகளில் 10 தொகுதிகளில் (யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, உடுப்பிட்டி, சாவகச்சேரி, நல்லூர், கோப்பாய், மானிப்பாய், வட்டுக்கோட்டை) EROS உம், 1 தொகுதியில் (கிளிநொச்சி) TULF உம் வெற்றி பெற்றன.

முஸ்லிம் காங்கிரஸ் 1 இடத்தை வென்றது. வன்னித் தேர்தல் மாவட்ட 1989 ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் அட்டவணை-15 மற்றும் 16இல் காட்டப்பட்டுள்ளன. இலங்கை சுதந்திரக் கட்சி போட்டியிட்டபோதும் எந்தவொரு ஆசனத்தைம் பெறவில்லை.

தேர்தல் முடிவுகளை பழைய தேர்தல் முறையில் பார்க்கும் போது 1989 ஆம் ஆண்டுத் தேர்தலில் வடக்கு மாகாணத்தின் வன்னி மாவட்டத்தில் உள்ள 3 தொகுதிகளிலும் (மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா) TULF வெற்றிபெற்றது.

1989 தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கில் இந்திய அரசின் வற்புறுத்தலின் பேரில் தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), EPRLF, TELO, ENDLF இயக்கங்களோடு தேர்தல் கூட்டணி அமைத்து உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டது. இந்த மூன்று இயக்கங்களும் அன்று ஆயுதம் தரித்த ஒட்டுக்குழுக்களாக இந்தியப் படையினருடன் சேர்ந்து மக்களை வாட்டி வதைத்து கொண்டிருந்த காலம். இக்கூட்டணியில் யோகேஸ்

### அட்டவணை 13
### இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1989
### யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

| தேர்தல் தொகுதி | EROS ஈரோஸ் | TULF த.வி.கூ | பதிவு செய்யப்பட்ட வாக்காளர் |
|---|---|---|---|
| சாவகச்சேரி | 7,851 | 6,350 | 51,374 |
| யாழ்ப்பாணம் | 18,688 | 5,323 | 49,068 |
| காங்கேசன்துறை | 14,801 | 9,073 | 60,282 |
| ஊர்காவற்றுறை | 17,108 | 3,706 | 49,401 |
| கிளிநொச்சி | 8,576 | 8,850 | 53,421 |
| கோப்பாய் | 17,846 | 6,717 | 56,413 |
| மானிப்பாய் | 18,521 | 6,048 | 58,166 |
| நல்லூர் | 21,123 | 4,211 | 61,624 |
| பருத்தித்துறை | 5,860 | 2,428 | 40,060 |
| உடுப்பிட்டி | 1,587 | 1,178 | 51,943 |
| வட்டுக்கோட்டை | 17,814 | 5,827 | 58,770 |
| தபால் வாக்குகள் | 565 | 302 | 1,688 |
| மொத்த வாக்குகள் | 150,340 | 60,013 | 592,210 |
| சதவீதம் | 62.68% | 25.02% | |
| ஆசனங்கள் | 8 | 3 | |

**வன்னித் தேர்தல் மாவட்டம் 1989**

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF / ENDLF / EPRLF / TELO) 2 இடங்களை வென்றது. தமிழ் குழுவான ஈழம் புரட்சிகர மாணவர் அமைப்பு (ஈரோஸ்) சுயாதீன குழுவாக போட்டியிட்டு 1 இடத்தை வென்றது. ஐக்கிய தேசிய கட்சி 1 இடத்தை வென்றது. இலங்கை

வரன், சிவசிதம்பரம், ஆனந்தசங்கரி யாழ்ப்பாணத்திலும் அமிர்தலிங்கம் மட்டக்களப்பிலும் போட்டியிட்டார்கள்.

இவர்கள் தங்களுக்கு பிரசாரம் தேவையில்லை. சனம் தங்களுக்கு தான் புள்ளடி போடும் என்ற இறுமாப்பிலும் ஆடாம ஜெயிச்சு காட்டுவோம் என்ற ஆணவத்திலும் மட்டுப்படுத்தப்பட்ட பிரசாரங்களில் இறங்கினர். விடுதலைப்புலிகள், தேர்தலை பகிஷ்கரிக்குமாறும் தேர்தலில்

### அட்டவணை 14 - இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1989
### யாழ்- தேர்தல் மாவட்டம்
### தேர்தலில் வெற்றியடைந்தவர்கள்

| தெரிவுசெய்யப்பட்டவரின் பெயர் | கட்சி | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| இளையதம்பி இரத்தினசபாபதி | EROS | 40,947 |
| இளையதம்பி பரராசசிங்கம் | EROS | 36,340 |
| சின்னத்தம்பி சிவமகாராசா | EROS | 22,622 |
| அருணாசலம் பொன்னையா செல்லய்யா | EROS | 20,747 |
| தம்பு லோகநாதபிள்ளை | EROS | 17,616 |
| செபஸ்தியாம்பிள்ளை எட்வெட் | EROS | 17,429 |
| கணபதி செல்வநாயகம் | EROS | 14,440 |
| ஜோசப் ஜோர்ஜ் ராஜேந்திரம் | EROS | 13,928 |
| கந்தையா நவரத்தினம் (EPRLF) | த.வி.கூ | 22,255 |
| சுரேஷ் பிரேமசந்திரன் (EPRLF) | த.வி.கூ | 20,738 |
| கணேஷசங்கரி யோகசங்கரி (EPRLF) | த.வி.கூ | 20,223 |
| த.வி.கூ - தமிழர் விடுதலைக் கூட்டணி | | |

### அட்டவணை 15- இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1989
### வன்னி தேர்தல் மாவட்டம்

| தேர்தல தொகுதி | TULF த.வி.கூ | UNP | SLMC- | EROS ஈரோஸ் | பதிவு செய்யப்பட்ட வாக்காளர் |
|---|---|---|---|---|---|
| மன்னார் | 5,492 | 2,507 | 4,419 | 2,472 | 46,990 |
| முல்லைத்தீவு | 2,937 | 426 | 1,440 | 2,882 | 40,224 |
| வவுனியா | 8,750 | 5,423 | 2,073 | 2,479 | 53,733 |
| தபால் வாக்குகள் | 92 | 169 | 13 | 46 | 501 |
| மொத்த வாக்குகள் | 17,271 | 8,525 | 7,945 | 7,879 | 141,448 |
| சதவீதம் | 39.99% | 19.74% | 18.40% | 18.24% | |
| ஆசனங்கள் | 2 | 1 | 1 | 1 | |

UNP- ஐக்கிய தேசியக் கட்சி, SLMC- சிறீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ்
த.வி.கூ - தமிழர் விடுதலைக் கூட்டணி

### அட்டவணை 16 இலங்கை பாராளுமன்றத் தேர்தல்,1989
### வன்னித் தேர்தல் மாவட்டம்
### தேர்தலில் வெற்றியடைந்தவர்கள்

| தெரிவு செய்யப்பட்டவரின் பெயர் | கட்சி | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| அந்தோனி இமானுவெல் சில்வா | த.வி.கூ - EPRLF | 6,385 |
| ராஜா குகனேஸ்வரன் | த.வி.கூ - TELO | 6,276 |
| ராஜா மனோகரி புலேந்திரன் | UNP | 3.260 |
| அபூபக்கர். எஸ்.எஸ்.எம். | SLMC | 5,355 |
| இன்னாசிமுத்து அல்பிரெட் | EROS | 935 |

பங்குபற்றுவோர் துரோகிகள் என்றும் அறிக்கை விட்டார்கள். நியமனப்பத்திரங்கள் கையளிப்பதற்கான கடைசி நாளில் அவ்வளவு நாளும் அமைதி காத்த EROS இயக்கம் சுயேட்சை குழுவாக வடக்கு மற்றும் கிழக்கில் தேர்தலில் களமிறங்கியது. புலிகளின் மறைமுக ஆதரவுடன் இந்திய சார்பு கட்சிகள் பாராளுமன்றம் செல்வதை தடுக்கும் நோக்கத்துடன் இந்த நகர்வு மேற்கொள்ளப்பட்டது. வெளிச்சவீடு சின்னத்தில் போட்டியிட்ட EROS பிரசாரத்தில் அடக்கியே வாசித்தது.

யாழ்ப்பாணத்தில் EROS இற்கு 8 ஆசனாங்களும் EPRLFற்கு மூன்று ஆசனங்களும் கிடைத்தன. EROS இன் ஸ்தாபகர்களில் ஒருவரான இரத்தினசபாபதி அதிகப்படியான விருப்பு வாக்குகளை பெற்றார். அவரோடு பின்னாளில் தமிழீழ நீதித்துறை பொறுப்பாளராயிருந்த பரராசசிங்கம், மாமனிதர் சிவமகாராசா ஆகியோரும் தெரிவாகினர். EPRLF சார்பில் போட்டியிட்ட மூவரும் தெரிவாகினர்.

சுரேஷ் பிரேமச்சந்திரனை விட நவரத்தினத்திற்கு கிடைத்த வாக்குகள் அதிகம். தமிழர் விடுதலை கூட்டணி பிரமுகர்கள் அனைவரும் தோல்வியை தழுவினார்கள்.

(தொடரும்...)

# அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளை அகற்ற வேண்டும்

## மன்னார் நகர சபையில் தீர்மானம்



(மன்னார்)

மன்னார் பஸார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் மன்னார் நகர சபையின் அனுமதியின்றி மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டுமானப்பணிகளை உடனடியாக அகற்ற மன்னார் நகர சபையினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மன்னார் நகர சபையின் 29 ஆவது அமர்வு நேற்று வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் நகர சபையின் முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது குறிப்பாக மன்னார் பஸார் பகுதியில் மன்னார் நகர சபைக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் மேலதிகமாக குறித்த வர்த்தக நிலையங்களை நடத்துபவர்கள் கட்டுமானப்பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

கழிவு நீர் வடிகான்களுக்கு மேற்பகுதியிலும் கட்டுமானப் பணியை மேற்கொண்டுள்ளனர்.

ஆனால் மன்னார்நகர சபை பிரிவில் உள்ள வீடுகளுக்கு சுற்று மதில் அமைப்பது என்றால் கூட மன்னார் நகர சபையின் அனுமதியை பெற்று சுற்று மதில் அமைக்க வேண்டும்.

ஆனால் மன்னார் பஸார் பகுதியில் அதுவும் மன்னார் நகர சபைக்குச் சொந்தமான சில வர்த்தக நிலையங்களில் மேலதிகமாக கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, கழிவு நீர் வடிகாலுக்கு மேற்பகுதியிலும் கட்டுமானப் பணிகள் இடம் பெற்றுள்ளன.

எனவே குறித்த நடவடிக்கைகளுக்கு உடனடியாக மன்னார் நகர சபை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த கட்டுமான பணிகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என நகர சபை உறுப்பினர்களான மைக்கல் கொலின் மற்றும் ஜோசப் தர்மன் ஆகியோர் கோரிக்கை முன் வைத்தனர்.

இதன்போது சபை உறுப்பினர்கள் முழு ஆதரவை வழங்கினர். இதன் போது எதிர்வரும் 14 நாட்களுக்குள் மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகளை குறித்த வர்த்தக நிலையங்களை நடத்துபவர்கள் அகற்ற வேண்டும்.

அல்லது மன்னார் நகர சபை குறித்த கட்டுமான பணிகளை அகற்றும் என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மன்னார் பஸார் பகுதியில் மரக்கறி விற்பனை நிலையம் அமைந்துள்ள நிலையில் மரக்கறி வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் குறித்த வியாபாரிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையில் தனி நபர்கள் பஸார் பகுதியில் மரக்கறி வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள சபையில் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்ட மன்னார் புதிய பேருந்து தரிப்பிடத்தை எதிர்வரும் 25 ஆம் திகதி மக்களின் பர்வனைக்காக கையளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-5-285)


அமெரிக்க தூதரக காரியாலயம், கொழும்பு.

## தமிழ் மொழிபெயர்ப்பாளர்/உரைபெயர்ப்பாளர் [ஆண் / பெண்]

இந்தப்பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், திருணம உறவு என்பனவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது.

மொழிபெயர்ப்பாளர்/உரைபெயர்ப்பாளர் தொழில்நுட்ப, தொழில் நுட்பம் சாரா உத்தியோகபூர்வ ஆவணங்கள், உத்தியோகபூர்வ உரைகள், செய்திவெளியீடுகள் ஆகியவற்றின் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான மொழிபெயர்ப்பினை தொழில் முறைதரத்துடன் வழங்குபவராக இருத்தல் வேண்டும். கூட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகை புரியும் சந்தர்ப்பங்களில் சமகால உரைபெயர்ப்பை வழங்க வேண்டும்.

வேலைக்குரிய கால அட்டவணை: முழு நேரம் வாரத்தில் 40 மணித்தியாலங்கள்.
மாதாந்த கொடுப்பனவு: 111,819/-

**தேவையான தகைமைகள்:**

1. கல்வி: சமூக விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல். அல்லது மொழியியல் / மொழிபெயர்ப்பு கல்வி. தொழில் சார் மொழிபெயர்ப்பாளரின் சான்று அவசியம்.
2. முன் அனுபவம்: சமகால உரைபெயர்ப்பு மற்றும் எழுத்து மூல மொழிபெயர்ப்பு இரண்டிலும் குறைந்த பட்சம் இரண்டு வருட அனுவபம்.
3. மொழி ஆற்றல்: தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் ஆங்கிலத்தில் உரையாடுதல். (பரீட்சிக்கப்படும்) தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் தமிழில் உரையாடுதல்.
4. தொழில் அறிவு : சகல மொழி சார்ந்த வாதங்கள் தொடர்பில் நிபுணத்துவம் இருத்தல் வேண்டும். ஆங்கிலத்திலும் தமிழிலும் சட்ட மற்றும் ராஜதந்திர ரீதியான ஆளுமை இருப்பது அவசியம். கடித வடிவமைப்பு தெரிந்திருப்பது கட்டாயம். இலங்கையின் வெளிநாட்டு விவகாரம், அரசியல், பொருளாதாரம், கலாசாரம், இராணுவ மற்றும் வணிக விவகாரங்கள் தொடர்பான சொற்பிரயோகம் துல்லியமான மொழிபெயர்ப்புக்கு அவசியம்.
5. திறன் மற்றும் இயலுமை: பொருளடக்கமும் அர்த்தமும் வெளிப்படும் வகையில் மொழிபெயர்ப்பு / உரைபெயர்ப்பு செய்யும் திறன்.சமகால உரைபெயர்ப்பு திறன் அதிகமாக வரவேற்கப்படுகிறது.மொழி மற்றும் உரை பெயர்ப்பில் அடையாள வெளிப்பாடு, சொற்றொடர், வார்த்தைப் பிரயோகம் என்பவை அச்சொட்டாகப் பிரதிபலிக்க வேண்டும். அடிப்படை கணினி பயன்பாட்டுத்திறனுடன் தமிழில் மிகச்சரியாகவும் விரைவாகவும் தட்டச்சு செய்யும் திறனும் எதிர்பார்க்கப்படுகிறது.

**அல்லது**

1. கல்வி: சமூக விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல். அல்லது மொழியியல் / மொழிபெயர்ப்பு கல்வி.
2. முன் அனுபவம்: சமகால உரைபெயர்ப்பு மற்றும் எழுத்து மூல மொழிபெயர்ப்பு இரண்டிலும் குறைந்த பட்சம் மூன்று வருட அனுவபம்.
3. மொழி ஆற்றல்: தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் ஆங்கிலத்தில் உரையாடுதல். (பரீட்சிக்கப்படும்) தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் தமிழில் உரையாடுதல்.
4. தொழில் அறிவு : சகல மொழி சார்ந்த வாதங்கள் தொடர்பில் நிபுணத்துவம் இருத்தல் வேண்டும். ஆங்கிலத்திலும் தமிழிலும் சட்ட மற்றும் ராஜதந்திர ரீதியான ஆளுமை இருப்பது அவசியம். கடித வடிவமைப்பு தெரிந்திருப்பது கட்டாயம். இலங்கையின் வெளிநாட்டு விவகாரம், அரசியல், பொருளாதாரம், கலாசாரம், இராணுவ மற்றும் வணிக விவகாரங்கள் தொடர்பான சொற்பிரயோகம் துல்லியமான மொழிபெயர்ப்புக்கு அவசியம்.
5. திறன் மற்றும் இயலுமை: பொருளடக்கமும் அர்த்தமும் வெளிப்படும் வகையில் மொழிபெயர்ப்பு / உரைபெயர்ப்பு செய்யும் திறன். சமகால உரைபெயர்ப்பு திறன் அதிகமாக வரவேற்கப்படுகிறது. மொழி மற்றும் உரை பெயர்ப்பில் அடையாள வெளிப்பாடு, சொற்றொடர், வார்த்தைப் பிரயோகம் என்பவை அச்சொட்டாகப் பிரதிபலிக்க வேண்டும். அடிப்படை கணினி பயன்பாட்டுத்திறனுடன் தமிழில் மிகச்சரியாகவும் விரைவாகவும் தட்டச்சு செய்யும் திறனும் எதிர்பார்க்கப்படுகிறது.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

இந்த பதவிக்கு விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை மின்னணு பிரதிகளுடன் மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- கல்விச்சான்றிழ்.
- சேவைகால அனுபவ சான்றிதழ்.
- சேவை தொடர்பான / தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ்
- பிரஜாவுரிமையை சான்றுப்படுத்தும் ஆவணங்கள். (அடையாள அட்டை / கடவுச்சீட்டு / வேறு ஆவணங்கள்).

**விண்ணப்பிக்கும் முறை:**

மேலதிக விபரங்களுக்கு https://lk.usembassy.gov/embassy/jobs/ என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாக மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு [ERA] மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.

**நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

உங்கள் விண்ணப்பங்கள் 2020 ஜுலை 24 ஆம்திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கப்பெற வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(c-964)


## முதலைக்கு இரையான சிறுமி

(கொழும்பு)

முதலையின் தாக்குதலுக்கு உள்ளான மூன்று வயது சிறுமி. உயிரிழந்த சம்பவம் மீகலேவா பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மீகலேவா பகுதியில் உள்ள ஏரியொன்றில் குறித்த சிறுமியும். அவரது தாயும் நேற்று முன்தினம் மாலை நீராடச் சென்ற போதே. முதலையிடம் சிக்கியுள்ளாள். பின்னர் வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகள் முதலையிடமிருந்து காயங்களுடன் மீட்டுள்ளனர்.

தொடர்ந்து சிகிச்சைக்காக தம்புத்தேகமா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்தாள்.

சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக தம்புத்தேகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)

## ராஜாங்கனையில் 395 பேருக்கும் தொற்றில்லை

(கொழும்பு)

பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட இராஜாங்கனை பகுதியைச் சேர்ந்த 395 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்றில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க கூறியுள்ளார். அத்துடன், ராகமை தனியார் வைத்தியசாலையில் இடம் பெற்ற சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில், அவர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படவில்லை என்பது கண்டறியப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஐ-4)


## பாரதம்

# அசாமில் வெள்ளப்பெருக்கு; மேலும் எழுவர் பலி

## 3.6 மில்லியன் மக்கள் பாதிப்பு







(அசாம்)

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நேற்று முன்தினம் புதன்கிழமை 7 பேர் உயிரிழந்தனர்.

இதனால் ஏற்பட்ட மொத்த உயிரிழப்புகளின் எண்ணிக்கையானது 66 ஆக உயர்வடைந்துள்ளதாக அசாம் மாநில அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் 26 மாவட்டங்களில் 3.6 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 44,000 இற்கும் அதிகமானோர் பாதுகாப்பான அனர்த்த முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அசாம் முழுவதும் அனர்த்த முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு உணவு, குடிநீர் மற்றும் மருத்துவ வசதிகளுக்கு தடையின்றி வழங்கும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாநில முதல்வர் தெரிவித்தார்.

உள்ளூர் ஊடக அறிக்கைகள் படி, மாநிலம் முழுவதும் வீடுகள், வீதிகள், பாலங்கள் என்பன சேதமடைந்துள்ளதுடன், பல பகுதிகளிலும் மண்சரிவும் ஏற்பட்டுள்ளது.

பிரம்மபுத்ரா, பாராலி, கோபிலி, குஷியாரா போன்ற முக்கிய ஆறுகளின் நீர்மட்டமும் தொடர்ந்தும் அதிகரித்து செல்வதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேநேரம் யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமான காசிரங்கா தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகம் ஆகியவற்றை இந்த வெள்ளம் கடுமையாக பாதித்துள்ளது.

பூங்காவின் சுமார் 80 சதவீதம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், இரண்டு காண்டாமிருகங்கள் மற்றும் ஐந்து காட்டுப்பன்றிகள் உட்பட அறுபத்தாறு விலங்குகள் உயிரிழந்துள்ளன.

மேலும் 170 விலங்குகளை பூங்கா அதிகாரிகள் மீட்டுள்ளனர், இதில் ஒரு வயது பெண் காண்டாமிருகக் கன்று அதன் தாயிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூங்கா உலகின் ஒரு கொம்பு காண்டாமிருகங்களின் மிகப்பெரிய வாழ்விடமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# உல

# கொரோ

# அடுத்த

## ரஷ்யா உ

(மொஸ்கோ)

**கொரோனாவுக்கான தடுப்**

**உத்தியோகபூர்வமாக அறிவி**

பல மாதங்களாக நீடித்து வரும் கொரோனாப் பரவலுக்கு இன்னும் முறையான தடுப்பு மருந்து பொதுப் பயன்பாட்டுக்கு வரவில்லை. உலக நாடுகள் கொரோனா தடுப்பு மருந்தை உருவாக்குவதில் தீவிரம் காட்டி வருகின்றன.

இந்நிலையில் இரு தினங்களுக்கு முன் கொரோனா தடுப்பு மருந்துக்கான

# அமெரிக்காவில் உயரும் தொற்று எண்ணிக்கை

## ஒருநாளில் மட்டும் 71 ஆயிரத்திற்கு மேல் பாதிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அசுரவேகத்தில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்றினால், நேற்று முன்தினம் மட்டும் 71,670 பேர் பாதிப்படைந்துள்ளதோடு, 997 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய, அமெரிக்காவில் 71 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்படையும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றினால், அமெரிக்காவில் இதுவரை மொத்தமாக 36 இலட்சத்து 16 ஆயிரத்து 747 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

மேலும் ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 140 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், வைரஸ் தொற்றினால் பாதிப்படைந்த 18 இலட்சத்து 30 ஆயிரத்து 645 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 16 ஆயிரத்து 459 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர்.

இதுதவிர, 16 இலட்சத்து 45 ஆயிரத்து 962 பேர் இதுவரை பூரண குணமடைந்து வீடுதிரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# பிரேஸிலில் எ

## 19 இலட்ச

(றியோடி ஜெனிரோ)

பிரேஸிலில் ஒரேநாளில் 47 ஆயிரத்து 857 பேருக்கு புதிதாக கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதன்மூலம் அங்கு கொரோனா பாதித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 19 இலட்சத்தை கடந்துள்ளது.

கொரோனா வைரஸ் பாதிப்பில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக உலக அளவில் 2 ஆவது இடத்தில் பிரேஸில் உள்ளது. அங்கு கொரோனா வைரஸ் தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

அதேபோல் உயிரிழப்பும் ஜெட் வேகத்



# கொரோனாவில் இருந்து மீள்வதற்குள் புபோனிக் பிளேக் நோயால் சிறுவன் பலி

## மங்கோலிய மக்கள் அச்சத்தில்

(மங்கோலியா)

மங்கோலியாவில் 15 வயதான சிறுவன்புபோனிக்பிளேக் நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தான்.

சீனாவில் இருந்து பரவத் தொடங்கிய கொரோனா வைரஸால் உலக நாடுகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. இதில் இருந்து மீண்டு வருவதற்காக உலக நாடுகள் போராடி வருகின்றன.

இந்த நிலையில் சீனா மற்றும் அதன் அண்டை நாடான மங்கோலியாவில் புபோனிக் பிளேக் நோய் கண்டறியப்பட்டுள்ளது. புபோனிக் பிளேக் என்பது பக்ரீறியா நோய். இது மர்மோட் போன்ற காட்டில் வாழும் கொறித்து தின்னும் உயிரினங்களால் பரவுகிறது.

இதற்கு உரிய சிகிச்சை அளிக்காவிட்டால், பாதிக்கப்பட்ட நபர் 24 மணி நேரத்தில் உயிரிழக்கக்கூடும் என உலக சுகாதார அமைப்பின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த நோய் மற்றவர்களுக்கும் பரவ வாய்ப்புள்ளதால் சீனா மற்றும் மங்கோலியாவின் சில பகுதிகளில் 3 ஆம் கட்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி மேற்கு மங்கோலியாவின் கோவ்ட் மாகாணத்தில் 2 பேருக்கு புபோனிக் பிளேக் நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

அவர்கள் 2 பேரும் மர்மோட் இறைச்சியை சாப்பிட்டதாகத் தெரிவித்தனர். எனவே மர்மோட் இறைச்சியை மக்கள் சாப்பிட வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மங்கோலியாவின் மேற்கு பகுதியில் உள்ள கோவி அல்டாய் மாகாணத்தில் 15 வயதான சிறுவன் ஒருவன் கடந்த 4 நாட்களுக்கு முன்பு புபோனிக் பிளேக் நோயால் பாதிக்கப்பட்டான்.

அந்த சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த செவ்வாய்க்கிழமை பரிதாபமாக உயிரிழந்தான்.

இது மங்கோலியாவில் புபோனிக் பிளேக் நோய்க்கு ஏற்பட்டுள்ள முதல் உயிரிழப்பாகும். இதனால் மங்கோலிய மக்கள் கடும் அச்சத்தில் உள்ளனர். (2)

# ஈரான் துறை

(டெஹ்றான்)

ஈரானின் தென்மேற்கு துறைமுகமான புஷரில் உள்ள கப்பல் தளத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டதில் ஏழு கப்பல்கள் சேதமடைந்தன.

ஈரானின் தென்மேற்கு பகுதியில் புஷர் துறைமுகம் அமைந்துள்ளது. இங்கு பிரமாண்டமான கப்பல் கட்டும் தளம் உள்ளது. இந்தத் தளத்தில் நேற்றுத் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீ




# வெளிநாடு

## உலகிற்கு மகிழ்ச்சியான செய்தி

# ரோனாவிற்கான தடுப்பு மருந்து

# த மாதம் முதல் பயன்பாட்டிற்கு

## உத்தியோகபூர்வ அறிவிப்பு




**ன தடுப்பு மருந்து அடுத்த மாதம் முதல் பயன்பாட்டுக்கு வரவுள்ளதாக ரஷ்யா க அறிவித்துள்ளது.**

கோரோ றயான ட்டுக்கு ரோனா ல் தீவி ளுக்கு க்கான

அனைத்துப் பரிசோதனைகளையும் வெற்றிகரமாக முடித்துள்ளதாக ரஷ்யா அறிவித்தது. பரிசோதனை முடிவில் எதிர்பார்த்த பலன் கிடைத்துள்ள நிலையில், வரும் ஓகஸ்ட் மாதத்தின் மத்தியில் தடுப்பு மருந்தைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர உள்ளது.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள கமாலேயே தொற்றுநோய் மற்றும் நுண்ணுயிரியல் நிறுவனம் இந்தத் தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்துள்ளது. தடுப்பு மருந்து தொடர்பான பரிசோதனைகளை செச்சினோவ் பர்ஸ்ட் மொஸ்கோ மெடிக்கல் யுனிவர்சிட்டி மேற்கொண்டுள்ளது.

இந்தத் தடுப்பு மருந்துக்கான பரிசோதனைகள் குறுகிய காலகட்டத்தில் முடிக்கப்பட்டாலும் அனைத்துப் பரிசோதனைகளுக்கும் முழுமையாக உட்படுத்தப்பட்டிருப்பதாக ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கமாலேயே ஆய்வு மையத்தின் இயக்குநர் அலெக்ஸாண்டர் கிண்ட்ஸ்பெர்க் கூறும் போது, "முதற்கட்டமாக குறைந்த அளவு மருந்துகளே பயன்பாட்டுக்கு வரும். எனவே அவை மருந்து நிலையங்களில் விற்பனைக்குக் கிடைக்காது" என்று தெரிவித்தார். (2)

# ில் கொவிட்-19 தொற்று ட்சத்தைக் கடந்தது

யிரத்து ரானா பட்டது. பாதித்த கை 19 அமெ க அள ் உள் தொற்று நாளு செல்கி வேகத்



தில் சென்று கொண்டிருக்கிறது. இந்த நிலையில் பிரேசிலில் நேற்று முன்தினம் ஒரேநாளில் 47 ஆயிரத்து 857 பேருக்கு புதிதாக கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதன் மூலம் அங்கு கொரோனா பாதித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 19 இலட்சத்தை கடந்துள்ளது. அதாவது அந்த நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு ஆளானவர்களின் எண்ணிக்கை 19 இலட்சத்து 26 ஆயிரத்து 824 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோல் அங்கு நேற்று ஒரு நாளில் மட்டும் 1,300 பேர் கொரோனாவுக்கு பலியாகினர். இதன் மூலம் அங்கு கொரோனா பலி எண்ணிக்கை 74 ஆயிரத்து 133 ஆக உயர்ந்துள்ளது. இந்த தகவலை அந்த நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (2)

# உலகத்தலைவர்களின் டுவிட்டர் கணக்குகளில் ஹக்கர்கள் கைவரிசை

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா, உலக பணக்காரர்களில் ஒருவரான பில்கேட்ஸ், எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜோ பிடன் உள்ளிட்ட உலக பிரபலங்களின் டுவிட்டர் கணக்குகளை மோசடி கும்பல் ஹக் செய்துள்ளது.

மேலும் எலான் மஸ்க், கேன் வெஸ்ட், கிம் கர்டாஷின் வெஸ்ட், ஜெப் பெசோஸ், மைக் ப்ளும்பெர்க் ஆகியோரது டுவிட்டர் கணக்குகளும் நேற்று முன்தினம் புதன்கிழமை ஹக் செய்யப்பட்டன.

அதேபோல் அப்பிள் போன்ற முன்னணி நிறுவனங்களின் கணக்குகளையும் மோசடிக் கும்பல் திடீரென ஹக் செய்துள்ளது. அவர்களுடைய டுவிட்டர் பக்கங்களில் பிட்கொயினுக்கு விளம்பரம் செய்யும் வகையில் டுவிட் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதுகுறித்து விளக்கமளித்துள்ள டுவிட்டர் நிர்வாகம், 'டுவிட்டர் கணக்குகளில் ஏற்பட்ட ஹக் குறித்து தெரிந்தது. இதுகுறித்து நாங்கள் விசாரணை செய்து வருகிறோம். அதனை சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. விரைவில் இதுகுறித்து விளக்கமளிப்போம்' என்று தெரிவித்தது.

இதேநேரம் உறுதிப்படுத்தப்பட்ட கணக்குகளில் இருந்தும் புதிய பதிவுகளை இடுதல் செயற்பாடுகளை டுவிட்டர் நிர்வாகம் தடை செய்துள்ளது.

மேலும் இரகசிய குறியீடுகளை (Password) மாற்றியமைப்பதற்கான செயற்பாடுகளையும் அந்த நிறுவனம் இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# றைமுகத்தில் பயங்கர தீ விபத்து; ஏழு கப்பல்கள் சேதம்

றைமுக ாத்தில் ் ஏழு தியில் இங்கு தளம் ற்றுத் ந்தத் தீ



விபத்தில் ஏழு கப்பல்கள் சேதமடைந்தன. பயங்கர தீ விபத்தால் அந்தப் பகுதி கரும்புகையாக காட்சியளித்தன.

ஈரானில் கடந்த ஒரு மாதமாக முக்கியமான இடங்களில் குண்டு வெடிப்பு அல்லது தீ விபத்துக்கள் நிகழ்ந்து வருகின்றன. இராணுவம், அணுசக்தி நிலையம், தொழிற்றுறை இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இது இஸ்ரேல், அமெரிக்கா போன்ற நாடுகளில் சைபர் நாசவேலை என்று ஈரானின் அதிகாரிகள் சிலர் குற்றம்சாட்டி வருகின்றனர். ஆனால் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் ஈரானில் நடக்கும் மர்மமான ஒவ்வொரு நிகழ்வுக்கும் பின்னால் நாங்கள் இருக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்திருந்தார்.

ஜூலை 2 ஆம் திகதி அணுசக்தி நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டது. ஜூன் 30 ஆம் திகதி மெடிக்கல் கிளினிக்கில் நிகழ்ந்த வெடிவிபத்தில் 19 பேர் உயிரிழந்தனர். ஜூலை 26 ஆம் திகதி பார்சின் இராணுவம் மற்றும் ஆயுதம் தயாரிக்கும் தளத்தில் விபத்து ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. (2)

# எனது பிரதேசத்தில் கொரோனா நோயாளி உயிரிழந்தால் சடலத்தை ஜனாதிபதி செயலகம் எடுத்துச் செல்வேன்

## மேர்வின் சூளுரை

(கொழும்பு)

**தனது பிரதேசத்தில் எவராவது கொரோனா தொற்றால் உயிரிழந்தால் அவரின் சடலத்தை ஜனாதிபதி செயலகத்துக்கு எடுத்துச் செல்லவுள்ளதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா சூளுரைத்தார்.**

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,



நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொரோனா தொற்றாளர்கள் உள்ளதாக தெரிவிக்கப்படும் இந்த நேரத்தில் அரசாங்கத்தின் நற்பெயரைப் பாதுகாக்க உள்ளூர் மற்றும் சர்வதேச சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும் என அவர் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ருவான் வெலிசாய அருகே ஜனாதிபதி பதவியேற்றதால், மன்னர் துட்டகைமுனு மற்றும் அநாகரிக தர்மபாலா ஆகியோரின் கொள்கையைப் பின்பற்றி மாட்டிறைச்சி கடைகள், விபசார விடுதிகள் மற்றும் விடுதிகள் மூடப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# விபத்தில் உயிரிழந்த பொலிஸ் அதிகாரிக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

ஹக்மன விபத்தில் உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிள் சர்ஜன்ட் பதவிக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஹக்மன பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொங்கல பகுதியில் அமைந்துள்ள வீதிச் சோதனைச்சாவடியொன்றில் கடந்த 13 ஆம் திகதி இரவு 11 மணியளவில் கடமையில் ஈடுபட்டிருந்தபோதே அவர் மீது டிப்பர் வாகனம் மோதியுள்ளது. இதனால் ஹக்மன பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய 36 வயதான, வலஸ்முல்ல பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழந்தார்.

இதன் பின்னர் விபத்தினை ஏற்படுத்திய நபர் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையிலேயே விபத்தில் உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிள் சர்ஜன்ட் பதவிக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ஐ-4)

# தேர்தல் குறித்த சுகாதார வழிகாட்டல்கள் வர்த்தமானி இரு நாட்களில் வெளியிடப்படும்

(கொழும்பு)

தேர்தல் குறித்த சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் இரு தினங்களில் வெளியிடப்படும் என அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஊடக தலைவர்களுடன் நேற்று முன்தினம் இடம் பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன்போது நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் குறித்த சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை விரைவில் வெளியிடுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மீண்டும் வலியுறுத்தியிருந்தது டன் எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், அந்தத் தேர்தல் காரணமாக கொரோனா நோய்த்தொற்று பரவுவதைத் தடுக்கும் வகையில் பல்வேறு கட்டுப்பாட்டு விதிமுறைகளை தாங்கள் பரிந்துரைத்திருந்தபோதிலும் அந்த விதிமுறைகளுக்கு இன்னும் சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)



# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வெற்றிக்கு வழி

எனக்கு தெரிந்த ஒருத்தர்.எந்த நேரம் பார்த்தாலும் டென்ஷன்லேயே இருப்பார்.ஏன் சேர் இப்படி? என்று கேட்டால் நான் நினைக்கின்றது மாதிரி மற்றவர்கள் நடந்து கொள்கின்றார்கள் இல்லை சேர்.என்பார்.

இப்படிப்பட்ட "டென்ஷன்" ஆசாமிகள் வாழ்க்கையிலே வெற்றி அடைகின்றது மிகவும் கஷ்டம்.டென்ஷனாகவே போய் சேர்ந்திடுவார்கள். மற்றவர்கள் எப்படி எங்களிடம் நடந்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோமோ...அது மாதிரி நாங்கள் முதலிலே அவர்களிடம் நடந்து காட்ட வேண்டும்.வெற்றிக்கான இரகசியங்களிலே இதுவும் ஒன்று.பல நிபுணர்கள் ரொம்பக் காலமாக ஆராய்ந்து வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழி முறைகள் இவ்வளவு தான் என்று சிலவற்றை சொல்லி இருக்கின்றார்கள். அவற்றில் ஒன்று–இரண்டை நாங்கள் தெரிந்து வைத்து கொள்ளலாம். நாங்கள் செய்ய விரும்புகின்ற காரியங்களிலே மற்றவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று நாங்கள் ஆசைப்பட்டால் முதலிலே அவர்கள் விரும்புகிற காரியங்களிலே நாம் ஒத்துழைக்க வேண்டும். முற்றிலும் அறிமுகம் இல்லாத ஒருவரிடம் பேச வேண்டியிருக்கிறது. அப்படி இருந்தால் கூட முதலிலே நாம் அந்த உரையாடலை ஆரம்பித்து வைக்க வேண்டும்.எங்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்தால் மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையிலே முதலில் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். நாம் எதிலேயும் நீடித்து இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் நடை முறையிலே உள்ள சுற்றுச் சூழலுக்குத் தகுந்த மாதிரி முதலிலே எங்களை சரி பண்ணிக் கொள்ள வேண்டும்.அதற்குப்பிறகு சுற்றுச் சூழலை மேம்படுத்திக் கொள்ளலாம்.

ஒரு பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கின்றது. அதிலே வெற்றிகரமாக முன்னேறுவது எப்படி என்றால் சாத்தியமான பல அம்சங்களை உற்சாகத்துடன் நாம் முதலிலே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இயற்கையின் விதி என்ன சொல்கின்றது என்பதை கொஞ்சம் யோசித்துப் பார்ப்போம்.

நீங்கள் எதை ஏராளமாக அறுவடை செய்ய விரும்புறீர்களோ..அதை முதலிலே நீங்கள் விதைக்க வேண்டும் ஏன்பது தான் இயற்கை நமக்கு சொல்லிக் கொடுக்கின்ற விதி.

உங்களுக்கு வலிமையும் நிதானமும் வேண்டுமா? அப்படிப்பட்டவராக உங்களை ஆக்கிக்கொள்ள விருப்பமா? அப்படி என்றால்... நீங்கள் தொல்லைகளையும் பிரச்சினைகளையும் பார்த்துவிட்டு உணர்ச்சிவசப்படக் கூடாது. அதாவது தொல்லைகளை உணர்ச்சியின் வடிவங்களாக ஆக்கக்கூடாது.

நாம் தினமும் பல மனிதர்களை சந்திக்க வேண்டியிருக்கின்றது. அதிலே சில பேர் சுயநலவாதிகளாக இருக்கலாம்... தற்பெருமைக்காரர்களாக இருக்கலாம். இவர்களை சந்திக்கின்ற பொழுது, பேசுகின்ற பொழுது எங்கள் மனநிலை பாதிக்காமல் பார்த்துக் கொள்வது எப்படி? நமக்கு எரிச்சல் வராமல் பார்த்துக் கொள்வது எப்படி?இதற்கு என்ன வழி என்றால்...

முதலிலே யாருமே பரிசுத்தமானவர்கள் அல்ல என்கின்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதையெல்லாம் சகிக்கின்ற பக்குவத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மனித இயல்புகளிலே உள்ள இந்தக் குறைபாடுகளைப் பார்த்துவிட்டு நாம் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது.

வாழ்க்கை என்பதே மிகவும் சுருக்கமானது. ஏற்கனவே அதிலே கஷ்டங்கள் உண்டு.அப்படி இருக்கின்ற பொழுது அதனுடன் கூட,பகை வெறுப்பு, கோபம்–இதையெல்லாம் சேர்த்துக் கொண்டு ஏற்கனவே இருக்கின்ற கஷ்டங்களை இன்னமும் அதிகமாக்கிக் கொண்டிருக்கக் கூடாது.

பிரபலமாகிறதுக்கும்,வெற்றி அடைவதற்கும் ,மகிழ்ச்சியுடன் இருக்கிறதுக்கும் மூன்று விடயங்கள் மிகவும் முக்கியம். அதாவது நன்றி, நல்லெண்ணம்,நல்வாழ்த்து.நன்றி சொல்லுங்கள்– நல்லெண்ணம் காட்டுங்கள். நல் வாழ்த்து கூறுங்கள்.

தோல்விகளிலேயிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.தோல்வி என்பது இழிவு இல்லை.அது பாடம்.

ஒருத்தர் தன்னுடைய நண்பரைப் பார்த்துக் கொள்வதற்காக ஆர்வத்துடன் புறப்பட்டுப்போனார். ஒரே மழை–சேறு– சகதி...தரையில் வழுக்கி விழுகின்ற பொழுது ஆகிவிட்டது.எப்படியோ ஒரு மாதிரியாக போய் சேர்ந்துவிட்டார்.

சேர்ந்ததுக்கு அப்புறம் சொன்னார்.

"இங்கே வந்து சேருவதற்குள்ளே படாதபாடு பட்டு விட்டேன். ஒரு அடி முன்னேறினால்,நாலு அடி பின்னாடி சறுக்கி விட்டுவிடுகிறது.." அப்படி என்கின்றார்.

அதைக் கேட்டதும் இவருக்கு ஆச்சரிடம்."அது எப்படி ஒரு அடி முன்னேறினால்,நாலு அடி பின்னாடி சறுக்கி விட்டுவிடுகின்றது என்கின்றீர்கள். அதன் பின்பு எப்படி இங்கே வந்து சேர்ந்தீர்கள்? " என்று கேட்டார்.

"அது ஒன்றும் கஷ்டமில்லை. நான் உடனே திரும்பி எங்கள் வீட்டுக்குப் போவதற்கு முயற்சி செய்தேன்.அதனால் இங்கே வந்து சேர்ந்துவிட்டேன்" அப்படி என்றார் அவர்.

# லசந்த விக்கிரமதுங்க கொலை விவகாரம்

# குற்றவியல் திணைக்களத்தின் இரகசியங்கள் அம்பலம்

## சீ.ஐ.டி.விசாரணைகள் தீவிரம்

(கொழும்பு)

**சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்த குற்றவாளிகள் தொடர்பான இரகசிய தகவல்களை கசிய விட்டதாக குற்றம் சுமத்தி ஊடகவியலாளர்கள் மற்றும் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் முன்னாள் அதிகாரிகளுக்கு எதிராக அந்த திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**

இதனடிப்படையில், ஈதலய சஞ்சிகையின் தொகுப்பாளரான ஊடகவியலாளர் ஸ்ரீலால் பிரியந்த கடந்த 14 ஆம் திகதி குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.



லசந்த விக்கிரமதுங்க கொலையில் இரகசியத் தகவல் கசிந்தது என்ற தலைப்பில் அந்த சஞ்சிகையில் வெளியான செய்தியில் வெளியிடப்பட்ட குற்றவாளிகளின் தொலைபேசி விபரங்களை வழங்கியது யார் என்பது குறித்து ஊடகவியலாளரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. எனினும் தனக்கு தகவல் வழங்கிய மூலத்தை வெளியிட ஸ்ரீலால் பிரியந்த மறுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

அத்துடன் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான விசாரணைகளுக்குப்பொறுப்பாக இருந்தவரும் பதுளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளவருமான உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி.எஸ். திசேரா எதிர்வரும் 20 ஆம் திகதி விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் தற்போது லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்தவர்களை புறந்தள்ளிவிட்டு, கொலையாளிகள் தொடர்பான தகவல்களை வெளியிட்ட நபர்களை பின்தொடர்ந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## வர்த்தமானி வெளியிட்டு சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்குக

### தேர்தல் தொடர்பான சுகாதார வழிகாட்டல் குறித்து ரோஹண

(கொழும்பு)

தேர்தல் தொடர்பான சுகாதார பரிந்துரைகளை வர்த்தமானிப்படுத்துவது தொடர்பாக சுகாதார அமைச்சு தொடர்ந்தும் மௌனம் காத்து வருகின்றமை கவலையளிக்கின்றது. இது தொடர்பாக ஜனாதிபதி தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.



பவ்ரல் அமைப்பு நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கொரோனாத் தொற்று மீண்டும் தலைதூக்கி வருவதாக சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். இவ்வாறான நிலையில் தேர்தல் பிரசாரங்களும் சூடுபிடித்து வருவதால் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி செயற்படுவது மிகவும் அத்தியாவசியமான தொன்றாகும்.

தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னர் தேர்தலின்போது பின்பற்ற வேண்டிய சுகாதார பரிந்துரை அடங்கிய அறிக்கையை சுகாதார அமைச்சு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கையளித்திருந்தது.

இருந்தபோதும் குறித்த சுகாதார வழிகாட்டல் அடங்கிய பரிந்துரையை வர்த்தமானிப்படுத்தி வெளியிட்டாலே அதற்கு சட்ட அங்கீகாரம் கிடைக்கும். அது இதுவரை இடம்பெறாமல் இருப்பதால் சுகாதார வழிகாட்டல்களை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத நிலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

தேர்தல் தொடர்பான சுகாதார வழிகாட்டல்களை வர்த்தமானிப்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு, அரசியல் கட்சிகள், சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜாசிங்க உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் இதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்தி இருக்கின்றனர்.

சுகாதார அமைச்சு இது தொடர்பாக எந்த அறிவிப்பையும் முன்வைக்காமல் தொடர்ந்தும் மௌனம் காத்து வருகின்றமை கவலையளிக்கின்றது. அத்துடன் இந்த விடயம் தொடர்பாக பவ்ரல் அமைப்பு பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியபோதும் அரசாங்கம் அது குறித்து போதிய கவனம் செலுத்துவதாக தெரியவில்லை.

தேர்தல் தொடர்பான சுகாதார ஏற்பாடுகள் அடங்கிய வர்த்தமானி பத்திரிகையை வெளியிட்டு, அதற்கு சட்ட ரீதியிலான அங்கீகாரத்தை வழங்குமாறு சுகாதார அமைச்சுக்கு கடிதம் மூலம் நாங்கள் அறிவித்திருக்கின்றோம். அதனால் மக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு இதுதொடர்பாக ஜனாதிபதி கவனம் செலுத்தி, வர்த்தமானிப்படுத்தும் நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டும்.

அத்துடன் தற்போது பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இடம்பெற்று வருகின்றன. ஆனால் எந்தவொரு அரசியல் கட்சியும் தமது கொள்கை பிரகடனத்தை இதுவரை வெளியிடவில்லை. தமது எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளின் கடந்தகால செயற்பாடுகள் விமர்சிக்கப்படுகின்றதே தவிர, மக்களுக்கான வேலைத்திட்டங்களை முன்வைத்து பேசுவதை பிரசார மேடைகளில் காண முடியவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-2)

## இருவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(கொழும்பு)

பொல்பித்திகம - கனபத்தன் கங்கையில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.


நேற்று ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த 5 பேர் இவ்வாறு நீராடச் சென்றுள்ள நிலையில் இருவர் நீரில் மூழ்கியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த இருவரும் பிரதேச மக்களினால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதனை தொடர்ந்து உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

16 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரும் 19 வயதுடைய இளைஞர் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (ஐ-4)

## சு.கவின் தலைமைத்துவத்தை மகிந்த ஒருபோதும் ஏற்க மாட்டார்

### அடித்துக் கூறுகிறார் யாப்பா



(கொழும்பு)

பொதுத்தேர்தலுக்கு பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தினை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஒருபோதும் பொறுப்பேற்க மாட்டார் எனத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, பொதுஜன பெரமுனவின் தலைவராக இருந்து கொண்டு புதிய அரசாங்கத்தில் அவர் பிரதமர் பதவியை ஏற்பார் என்றும் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2015 ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் ஏற்படுத்திய மாற்றங்களின் காரணமாகவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஸ்தாபிக்கப்பட்டது.

ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் பொதுஜன பெரமுன தேசிய தேர்தல்களில் வெற்றி பெற்று தற்போது ஆட்சியையும் கைப்பற்றியுள்ளது.

இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெறும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-4)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

**24**

கலாநிதி முருகர் குணசிங்கம்

பிரித்தானிய அரசு இலங்கையில் ஆட்சி செய்தபோது ஈழத்தமிழர்கள் வாழ்வில் பாரிய நல்ல காரியங்களைச் செய்துள்ளமையை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் அதே அரசுதான் ஈழத் தமிழர்களை இன்றைய இந்த அவலமான நிலைக்குத் தள்ளியதையும் யாரும் மறுக்க முடியாது.

ஆனால் பிரித்தானிய அரசு தான் புரிந்த வரலாற்றுத் தவறுக்குக் கைமாறாக குறைந்தபட்சம் சுமார் இரண்டு இலட்சத்திற்கு உட்பட்ட ஈழத்தமிழர்களுக்குப் பிரித்தானியாவில் மறுவாழ்வு அளித்து இருக்கின்றது.

ஆனால் தமிழ் ஈழத்தைச் சுரண்டி, அந்த நாட்டு வளங்களை எல்லாம் சுருட்டி கப்பல் கப்பலாக ஏற்றித் தன் நாட்டுக்குக் கொண்டுபோய் தன் நாட்டைச் செழுமைப்படுத்திய நெதர்லாந்து அரசு அதே மக்கள் கையறு நிலையில் அரசியல் தஞ்சம்கோரி அகதிகளாக அங்கு சென்றபோது அவர்களை நடத்திய முறையும் அவர்களை அந்த மண்ணில் காலடி எடுத்து வைக்க மறுத்தமையும் மனித வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் ஒரு கறைபடிந்த நிகழ்வாகவே நிரந்தரமாக அமைந்து உள்ளது.

## இத்தாலி

போர்த்துக்கீசர் தமிழ் ஈழத்தை ஆண்ட 1560-1650 காலப் பகுதியில் கத்தோலிக்க மதம் மிகவும் தீவிரமாகப் பரப்பப்பட்டது. ஒல்லாந்தர் ஆட்சியின் போது கத்தோலிக்க மதமாற்றம் பெருமளவு தடைப்பட்டது.

பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த காலப்பகுதியில் (1795-1947) மதச் சுதந்திரம் சகலருக்கும் வழங்கப்பட்டமையினால் கத்தோலிக்க மதம் மீண்டும் புத்துயிர் பெற்று ஈழத்தில் பரவியது.

1977 ஆம் ஆண்டுகள் வரை இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு உரிய அனுமதி பெறுவதில் பல தடைகள் இருந்தன.

ஆனால் 1977 இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. வெளிநாடு செல்வதற்கான தடைகள் தளர்த்தப்பட்டன.

எனவே கத்தோலிக்கப் பாதிரிமார்களும் குருத்தினிகளும் கத்தோலிக்க மதக் கல்வி பெறுவதன் பொருட்டும் கத்தோலிக்க மத போதனையில் தேர்ச்சி பெறவும் இத்தாலி நாட்டுக்குச் செல்லத் தொடங்கினர்.

அவர்கள் ஈழத்தில் இருந்து பல கத்தோலிக்கப் பெண்களை இத்தாலிக்கு வரவழைத்து அங்கு செல்வம் படைத்தவர்களின் வீடுகளில் வீட்டு வேலை செய்யும் பணியில் அமர்த்தி அவர்களுக்கு வருவாயைத் தேடிக் கொடுத்தனர்.

அவ்வாறு சென்றவர்கள் 1977 ஐத் தொடர்ந்து இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரங்களினால் இலங்கைக்குத் திரும்பிப் போகாது இத்தாலியில் அகதி அந்தஸ்து பெற்று நிரந்தரமாகத் தங்கி விட்டனர்.


பின்னர் தமது கணவன் அல்லது மனைவி, பிள்ளைகளையும் தம்மோடு இணைத்துக் கொண்டனர்.

1970களை அடுத்த காலப்பகுதிகளில் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்கான விசா நடைமுறைகள் எளிதாக இருந்தன.

ஆனால் எழுபதுகளின் இறுதிக் காலகட்டத்தில் பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து போன்ற முக்கிய ஐரோப்பிய நாடுகள் கடுமையான குடிவரவுக் கொள்கைகளை அறிவித்தன.

கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு நன்கு படித்தவர்கள் மட்டுமே திறமை அடிப்படையில் செல்லக் கூடியதாக இருந்தது.

ஆனால் இத்தாலி நாட்டுக்குள் செல்வதற்கான விசா அனுமதி தேவைப்படாத காலமாக இருந்ததால் தமிழ் இளைஞர்களுள் பலர் இத்தாலி நாட்டுக்குள் செல்வதைப் பார்க்க முடிந்தது.



அவர்கள் கப்பல்களில் பணியில் சேர்ந்தனர். இத்தாலியில் தொழில் பெறுவதிலும் தொழில் புரிவதற்கான அனுமதிப்பத்திரம் எடுப்பதிலும்கூட அதிக கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. எனவே இத்தாலியில் அகதி அந்தஸ்து கிடைத்தவர்கள் நிரந்தரமாக அங்கேயே தங்கி விட்டார்கள்.

ஏற்கனவே இத்தாலிக்குச் சென்று நிரந்தரமாக வாழ்ந்து கொண்டு இருக்கின்ற கிறிஸ்தவ மதப்பாதிரிமார்கள், குருத்தினிகள், கத்தோலிக்க மதம் சார்ந்த தமிழர்கள் ஈழத்தமிழர்களுடன் குறிப்பாக இளம் தலைமுறையினருடன் நெருக்கமாக தொடர்புகளை ஏற்படுத்தி இருந்தனர். எனவே ஈழத்தமிழர்கள் இத்தாலிக்குள் பெருமளவு அகதிகளாகச் செல்ல முடிந்தது.

இந்நூலாசிரியர் 2013 பெப்ரவரியில் இத்தாலி நாட்டின் புள்ளிவிபர அலுவலகத்திற்குச் சென்றபோது அந்த அந்த அலுவலகம் அமைந்து இருந்த கட்டடம் திருத்தி அமைக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருந்தமையால் பூட்டி வைக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக ஈழத்தமிழர்கள் பற்றி மக்கள் தொகையைப் பெற முடியாமல் போய்விட்டது.

ஆனால் அதிகாரபூர்வ ஆதாரங்களின் அடிப்படையிலும் ஒருசில ஆய்வுக் கட்டுரைகளிலும் இருந்து பெறப்பட்ட தரவுகளிலும் இருந்தும் நேர்காணல் மூலம் தெரிவிக்கப்பட்ட விபரங்களின் அடிப்படையிலும் இத்தாலியில் வாழும் ஈழத்தமிழர்களின் தொகையை அறிய முடிகின்றது.

2010 ஆம் ஆண்டு அறிக்கை சுமார் 15,000 ஈழத்தமிழ் அகதிகள் இத்தாலியில் இருப்பதாகக் குறிப்பிடுகிறது. சிவசுப்பிரமணியத்தின் ஆய்வுக் கட்டுரையில் 25,000 தமிழ் அகதிகள் இத்தாலியில் இருப்பதாக தெரிகின்றது.

மேலும் 2013 இல் பேராசிரியர் பீற்றர் ரீவ்ஸ் (Peter Reeves)வினால் பதிப்பிக்கப்பட்ட கலைக்களஞ்சிய விபரங்களின்படி சுமார் 25,000 ஈழத்தமிழர்கள் இத்தாலியில் வாழ்வதாகக் கணக்கிட முடிகிறது.

இத்தாலியில் உள்ள தமிழர் சமூக சேவையாளர் சிலரை இந்நூலாசிரியர் சந்தித்துக் கலந்துரையாடியபோது அவர்களும் சுமார் 25,000 இற்கும் 30,000 இற்கும் இடைப்பட்ட தொகையில் ஈழத் தமிழர்கள் இத்தாலியில் வாழ்வதாகத் தெரிவித்தனர்.

இவர்கள் இத்தாலியின் தென்பகுதியில் கூடுதலாக வாழ்வதாகவும் குறிப்பாக கதனியா (Catania), ஜெனோவா (Genoa), மொடினா (Modena), மிலான் (Milan), ரோம் (Rome)ஆகிய பகுதிகளில் செறிந்து வாழ்வதாகவும் கூறப்பட்டது.

## ஸ்கண்டினேவிய நாடுகள்

### நோர்வே

நோர்வே நாட்டுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் உள்ள தொடர்பு, பிரித்தானியா, நெதர்லாந்து தவிர்ந்த ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, இத்தாலி போன்ற நாடுகளைவிட சற்று வித்தியாசமானதாகும்.

ஈழத் தமிழரான அன்ரனி ராஜேந்திரம் (Antony Rajenram) என்பவர் நோர்வே நாட்டுடன் முதல் தொடர்பை ஏற்படுத்திய சுவையான நிகழ்வுடன் அவ்வரலாறு தொடங்குகின்றது.

அவர் 1950களில் மோட்டார் சைக்கிளில் ஐரோப்பிய நாடுகளைச் சுற்றிவிட்டு 1956 இல் நோர்வே நாட்டுக்குள் காலடி எடுத்து வைத்தார்.

நோர்வீஜியப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். ஈழத்தமிழரின் நலனுக்காக நோர்வே நாட்டுடன் இணைந்து சீ-நோர் திட்டத்தின் கீழ் (Ceylon-Norway Project- CEYNOR) என்னும் தொழிற்சாலையை காரைநகரில் நிறுவினார்.

அங்கே மீன்பிடி, மீன்வலை பின்னல், கப்பல்கள் வடிவமைத்தல் போன்ற வேலைகளுக்கு யாழ்.குடாநாட்டுத் தமிழர்கள் அமர்த்தப்பட்டனர்.

1960 இல் இலங்கை அரசாங்கம் அதனைக் கையேற்கும் வரை சீராக நடைபெற்றது.

மேற்படி காலகட்டத்தில் சிறிது சிறிதாகத் தமிழர்கள், சீ-நோர் திட்டத் தொடர்பினூடாக நோர்வே நாட்டுக்கு வந்து தொழில் புரிந்தனர்.

பின்னர் இவர்கள் தமது குடும்பங்களை வரவழைத்து நிரந்தரமாகத் தங்கியதாக அறிய முடிகிறது.

நோர்வே நாட்டின் குடிவரவுக் கொள்கையானது மிகவும் இறுக்கமான, அடிக்கடி மாறும் தன்மை கொண்ட, தனித்தனி அதிகார வரம்புகளுக்குள் (Bureaucracy) உட்பட்டு இருப்பதால் அகதிகளாகச் சென்ற ஈழத் தமிழர்களை நீண்டகாலம் இழுத்தடித்தமையையும் பல ஆய்வுகளின் வாயிலாக அறிய முடிகிறது.

அகதி அந்தஸ்து வழங்கப்பட்டவர்களின் மனைவி அல்லது கணவர் மற்றும் பிள்ளைகளை மட்டுமே குடும்ப மீள் இணைவுக் கொள்கைப்படி நோர்வே நாட்டிற்குள் வர அனுமதித்தனர். இதன் விளைவாக நோர்வே சென்ற தமிழ் அகதிகளின் நெருங்கிய குடும்ப உறவினர்கள் அவர்களுடன் சேர முடியாத நிலைமையை ஏற்படுத்தி இருந்தனர்.

ஆனால் 1983 இல் தமிழர்களுக்கு இலங்கையில் இழைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கை காரணமாகவும் 1990களில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் இடம்பெற்ற போர் காரணமாகவும் அகதி அந்தஸ்துக்கோரி விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களைத் திருப்பி இலங்கைக்கு அனுப்ப எடுத்த முடிவுகளில் மாற்றத்தை ஏற்படுத்தி அநேகமாக எல்லோருக்கும் அகதி அந்தஸ்து வழங்கினர்.

(தொடரும்)




நாடாளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
எம் தமிழ்த் தலைவ!
நேர்மைமிகு அரசியலை தந்தருள
நீ எமக்குத் தேவை
அண்டம் அதிர்ந்த பேரொலி
வண்டமிழ் காத்த பேரணி
நல்லூர் வீதியில் நடந்தது அன்று...
இதுபோல் மீண்டும் ஓர் எழுச்சி
ஓகஸ்ட் 5 இல் பொங்கட்டும்
தமிழினத்திற்கு
புதிய தலைமை உதயமாகட்டும்
நீதியின் கரங்களுக்கு
நேர்மையான பக்கபலம்
6
நீதியரசர்
சி.வி.விக்னேஸ்வரன்
X
தமிழ் மக்கள் தேசிய கூட்டணி
10
தவச்செல்வம் சிற்பரன்
(Architect மொரட்டுவ பல்கலைக்கழகம்)
தமிழினப்பற்றாளர் அவை
(C-056)

# ஆடி மாத இராசி பலன்கள்

## 16.07.2020-16.08.2020

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



சார்வரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் 12ஆம் இடமான விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அதே நேரத்தில் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. இலாபாதிபதி புதன் லாப ஸ்தானத்திலும், தொழில் ஸ்தானாதிபதி சுக்கிரன் தொழில் ஸ்தானத்திலும் இருப்பதால், பொருளாதாரம் மிகச் சிறப்பாக இருக்கும். பார்க்கும் குருவால் பலவிதங்களிலும் நன்மை அடையப் போகிறீர்கள்.

கடக புதனின் சஞ்சாரம்

ஜூலை 27ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், விரய ஸ்தானத்திற்கு வரும்பொழுது குடும்பச் செலவு கூடுதலாக இருக்கும். திட்டமிட்ட காரியங்கள் சில நடைபெறாமல் போனால் கூட, திட்டமிடாது செய்யும் காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். குழந்தைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக முயற்சி கைகூடும். சுபகாரியப் பேச்சுகளில் இதுவரை இருந்த தடை அகலும். கட்டுமானப் பணிகளில் இருந்து வந்த முட்டுக்கட்டைகள் விலகும்.

மிதுன சுக்கிரனின் சஞ்சாரம்

ஜூலை 30ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் இலாப ஸ்தானத்திற்கு வருவதால், பொருளாதாரத்தில் இருந்த தேக்க நிலை மாறும். புதிய கூட்டாளிகள் வந்திணைவர். தேங்கிக் கிடந்த காரியங்கள் இப்பொழுது சுறுசுறுப்பாக நடைபெறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

மேஷ
செவ்வாயின்
சஞ்சாரம்

ஓகஸ்ட் 12ஆம் திகதி மேஷ இராசிக்குச் செவ்வாய் வருகின்றார். இதுவரை அஷ்டமத்தில் சஞ்சரித்த செவ்வாயால் ஏற்பட்ட ஆரோக்கியத் தொல்லைகள் இனி குறையும். சொத்துப் பிரச்சினைகள் சுமுகமாக முடியும்.




இருண்ட சூழ்நிலை மருண்டு ஓடும் நேரமிது. சகோதர வர்க்கத்தினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். நண்பர்கள் நல்ல தகவலைத் தருவர்.

சிம்ம புதனின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 13ஆம் திகதி சிம்ம இராசிக்கு புதன் வருகின்றார். இதன் விளைவாக தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில், உத்தியோகம் சம்பந்தமாக நீங்கள் செய்யும் முயற்சிகள் கைகூடும். குடும்ப வருமானம் கூடுதலாக இருக்கும். வாழ்க்கைத் துணை மற்றும் பிள்ளைகளாலும் வருமானம் வரலாம். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த அனுகூலத் தகவல் வந்து சேரும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக் கசப்புகள் மாறும்.

இம்மாதம் இல்லத்துப் பூஜை அறையில் சூரியன் படம் வைத்து ஆதித்ய கவசம் பாடி வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் தொடக்கத்தில் அஷ்டமத்தில் செவ்வாய் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படலாம். கணவன்-மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்கும் வேலை கிடைத்து குடும்ப வருமானம் கூடும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். பணிபுரியும் பெண்களுக்கு பதவி மாற்றம் உண்டு. தடைப்பட்ட காரியம் தானாக நடைபெற விநாயகப் பெருமானை வழிபடுவது நல்லது.

சார்வரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் 10ஆம் இடமான மிதுனத்தில், தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கின்றார். அவரோடு ராகுவும் இணைந்துள்ளார். 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெற்ற சந்திரனோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். தனுசு ராசியில் இருக்கும் குருவின் பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் படிப்படியாக அகலும்.

கடக புதனின் சஞ்சாரம்

ஜூலை 27ஆம் திகதி உங்கள் இராசிநாதனான புதன், லாப ஸ்தானம் எனப்படும் 11 ஆம் இடத்திற்கு வருகின்றார். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

தொழில் வளர்ச்சி திருப்தி தரும். அரசியல் ஈடுபாடு கொண்ட வர்க ளுக்கு அதிகார வர்க்கத்தினரின் ஆதர வோடு நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்புகளும் கைகூடும்.

மிதுன
சுக்கிரனின் சஞ்சாரம்

ஜூலை 30ஆம் திகதி மிதுன இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். தனாதிபதி சுக்கிரன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொழிலில் மிகப்பெரிய வளர்ச்சி ஏற்படும். தடைகள் அனைத்தும் அகன்று தக்க விதத்தில் நல்ல பலன்கள் கிடைக்கப் போகின்றது. வருமானம் திருப்தி தரும். வீட்டிற்குத்




தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும்.

மேஷ செவ்வாயின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 12ஆம் திகதி மேஷ இராசிக்குச் செவ்வாய் வருகின்றார். அஷ்டமத்தில் செவ்வாய் சஞ் சரிக்கும் இந்த நேரத்தில் ஆரோக்கியத் தொல்லை ஏற்படலாம். சில காரியங்களில் எதிர்பார்த்த அளவிற்கு பலன்கள் கிடைக்காது. உடன்பிறப்புகள் உங்களோடு இணைந்து செயற்பட மறுப்பர். கடன் சுமை கொஞ்சம் கவலை தரலாம். எதிரிகளின் பலம் கூடும். பொறுமையைக் கடைப் பிடிக்க வேண்டிய நேரம் இது.

சிம்ம புதனின் சஞ்சாரம்

ஓகஸ்ட் 13ஆம் திகதி சிம்ம இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிநாதன் விரயஸ்தானத்திற்கு செல்லும் இந்த நேரத்தில் இடமாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் உருவாகலாம். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். தேவைக்கேற்ற பணம் அந்தந்த நேரத்தில் கிடைக்கும். இம்மாதம் இல்லத்து பூஜை அறையில் கண்ணன் படம் வைத்து, கண்ணன் கவசம் பாடி வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் தைரியமும், தன்னம்பிக்



கையும் கூடும். மாதத்தின் முற்பகுதியில் வளர்ச்சியும், பிற்பகுதியில் தளர்ச்சியும் ஏற்படலாம். கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலமே விருப்பங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். சக பணியாளர்களால் தொல்லை ஏற்படும். சதுர்த்தி விரதமிருந்து ஆனைமுகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

(தொடரும்)

# மூன்று மாதங்கள் உறக்கத்திலா? ஜனாதிபதியிடம் மனோ கேள்வி

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டுமென தற்போது கூறும் ஜனாதிபதி மூன்று மாதங்கள் உறக்கத்தில் இருந்தாரா என கேள்வி எழுப்பியுள்ள கொழும்பு மாவட்ட வேட்பாளர், முன்னாள் அமைச்சர் மனோ கணேசன், பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டுமெனவும் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ள மனோ, "கொரோனா பரிசோதனைகளை அதிகரியுங்கள் என இன்று ஜனாதிபதி கூறுகிறார்.

இவரென்ன மூன்று மாத உறக்கத்தில் இருந்து இன்று தான் விழித்தாரா? கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இந் நாட்டில் 40,000 பேர் இருக்கிறார்கள்.

அவர்களை கண்டறிய உடன் பரிசோதனைகளை அதிகரியுங்கள் என மூன்று மாதங்களுக்கு முன்னரே சொன்னேன். அப்போது மனோ பொய் சொல்கிறார். அவரை கைது செய்யுங்கள் என ஒரு தேரர்



உட்பட பலர் கத்தினார்கள். இப்போதாவது, அதைச் செய்யுங்கள். இரண்டாம் அலை அடிக்க முன் அதைச் செய்யுங்கள்." என மனோ மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# கைதான பொலிஸ் அதிகாரிகளின் வீடுகள் இரசாயனப் பகுப்பாய்வாளரின் கண்காணிப்பில்

(கொழும்பு)

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்தின் அதிகாரிகளினால் போதைப் பொருள் வர்த்தகருடன் தொடர்பு வைத்திருந்த சம்பவம் தொடர்பில் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி குறித்த அதிகாரிகள் சிலரின் வீடுகள் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரினால் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கைது செய்யப்பட்டுள்ள உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் மினுவாங்கொடையில் அமைநதுள்ள வீடொன்றும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், சந்தேகநபர்களான பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்தின் அதிகாரிகளால் அரிசி மூடைகளில் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் இடமொன்றும் அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# வெலிக்கடை சிறைச்சாலை விவகாரம்; மூன்றாவது சந்தேக நபர் விடுதலை

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு வெலிக் கடை சிறைச்சாலையில் கைதி கள் மீது துப்பாக்கிப் பிரயோ கம் மேற்கொள்ளப்பட்டு கொலை செய்த குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் மூன்றாவது சந்தேக நபரான இமதுவகே இந்திக சம்பத் என்ற நபரை விடுதலை செய்ய நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு விசேட மேல் நீதிம ன்றம் மூவரடங்கிய இந்த உத்த ரவை பிறப்பித்துள்ளது. முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையா ளர் எமில் ரஞ்சன் மற்றும் பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ ஆகியோர் இந்த வழக்கின் ஏனைய சந்தேக நபர்களாவர்.

குறித்த நபருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கக் கூடிய சாட்சிகள் இல்லாத நிலையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, முதலாவது மற்றும் இரண்டாவது சந்தேக நபர்களான முன்னாள் சிறைச் சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் மற்றும் பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ ஆகியோருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் 30ஆம் திகதி விசா ரணைக்கு வரவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இராணுவ வீரர்களுக்கு கொரோனா உறுதி
## தனிமைப்படுத்தலில் 200 பேர்

(கொழும்பு)

கந்தகாடு மறுவாழ்வு மத் திய நிலையத்தில் பணியாற் றிய இராணுவ வீரர்கள் மூவ ருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலை யில், அவர்களுடன் தொடர்புட்ட 200 பேர் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் மூன்று பேர் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு தகவல் வெளி யிட்டிருந்தது.

சுகாதார அமைச்சு வெளியிட் டிருந்த தகவல்களின்படி, குறி த்த மூவரும் கந்தகாடு மறு வாழ்வு மத்திய நிலையத்தில் பணியாற்றும் இராணுவ வீரர் கள் என தெரியவந்துள்ளது.

குறித்த இராணுவ வீரர்கள் விடுமுறையில் தங்களின் வீடு களுக்குச் சென்று மீண்டும் பணிகளுக்கு திரும்பியபோது அவர்களை பரிசோதனைக் குட்படுத்தப்பட்டபோதே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து பதுளை-கல்கிரியகம பகுதியில் 200 க்கும் மேற்பட்டோர் தனிமைப்ப டுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ள னர். (ஜ-4)



# ஆன்மீகம்

## அது என்ன சிவ பூஜையில் கரடி?

அரைமணி நேரம் ஆயிற்று. புத்தகத்தை மூடிவைத்து விவேகானந்தரிடம் நண்பர் வண க்கம் என்றார், இப்போதுதான் வந்தீர்களா? என்றார் விவேகானந்தர். நான் வந்து அரை மணி நேரம் ஆயிற்று. ஆமாம் இவ்வளவு பெரிய புத்தகத்தின் பக்கங்களை ஏடு ஏடா கத் திருப்பிக்கொண்டேயிருந்தீர்களே! பார்ப் பதற்குப் படங்கள் கூட கிடையாதே! இது என்ன விளையாட்டுச் செய்கை? என்றார். நூலகம் என்ன விளையாட்டுக் கூடமா? புத்த கத்தை பக்கம் பக்கமாகப் படித்துக் கொண்டே அரைமணியில் முழுப் புத்தகத்தையும் முடித்து விட்டேன் என்றார் விவேகானந்தர். பக்கம் பக்கமாகப் படிப்பதா? அது எப்படிச் சாத்தி யம்? என்றார் நண்பர்.

நான் சிறந்த பிரம்மச்சரிய ஒழுக்கம் உடை யவன். எனவே மனம் கட்டுக்குள் நிற்கும். ஒருமுகப்பட்டு படித்தேன். குழந்தைகள் அ...வ...ன்... என்று எழுத்து எழுத்தாகப் படிக்கின்றன. சில வகுப்புகள் தேறிப் பின் அவன்... என்... நண்பன் என்று சொல் சொல்லாக சிறுவன் படிக்கிறான். திறமையிற் சிறந்தவன். அவன் என் நண்பன் என்று வாக்கியமாகவே படிக்கிறான். சிதறாத கவனம் இவ்வண்ணம் அமைந்தால் பிரிவு பிரிவாகவும் பக்கம் பக்கமாகவும் படிக்க லாம். நான் படித்து முடித்தேனா என்று நீங்கள் கேள்வி கேளுங்கள். நான் பதில ளிக்கிறேன். என்றார் விவேகானந்தர். நண்பர் பரிசோதித்தார். விவேகானந்தர் வெற்றி பெற்றார் என்பதை விளம்பவும் வேண்டுமா?

இதைக் கேட்ட என் நண்பர் என்னிடம் கிசுகிசுத்தார்: பக்கம் பக்கமாக நம்மவர்கள் படிக்க வேண்டாம் ஒரு பக்கத்தையாவது ஒழுங்காகப் படித்தால் போதும் பாண்டவர் கௌரவர் மற்றவர்கள் எனப் பார்க்காது எல்லோருக்கும் பொதுவாக வில் பயிற்சி வகுப்பு எடுத்தவர்தான் குருநாதராகிய துரோணர். அவர் அசுவத்தாமனின் தந்தை.

தந்தையிடம் ஒருநாள் அசுவத்தாமன் சொன்னான். என்னை விட நீங்கள் அர்ஜுனனிடமே அதிக அன்பு வைத் தீர்கள். அவனுக்கே அதிகம் சொல்லித் தந்திருக்கிறீர்கள். இதுதான் உண்மை. இல்லாவிடில் அவன் எப்படி என்னை விடத் திறமைசாலியாக ஆனான்?

மகனே பாண்டவர், கௌரவர், பாசம் மிகுந்த மகன் என்றெல்லாம் பார்க்காது பாரபட்சம் இன்றித் தான் நான் அனைவருக்கும் பாடம் நடத்தி னேன். ஒருமைப்பட்ட மனத்துடன் எவன் விளங்குகின்றானோ அவனுக்கே கவலைகள் காலடியில் வந்து ஏவல் செய்யும்.

சொல்லப்போனால் பாடம் எடுப்பதை மறைந்திருந்து கவனித்த ஏகலைவன் அனைவரைவிடவும் அர்ஜுனனை விடவும் ஏன் என்னை விடவும் அதிகமாக என்னிடமிருநது கற்றுக்கொண்டிருக்கின்றான் என்றார் குருநாதர்.

சிவ பூஜையில் கரடி என்ற சொற் றொடரை நாம் கேள்விப் பட்டி ருப்போம். சிவபூஜையில் கரடி என்ற தும் நமக்கெல்லாம் ஒரு முனிவர் காட்டில் தவம் செய்து கொண்டிருக்க வேண்டும். அதை ஒரு கரடி வந்து கெடுத்திருக்க வேண்டும் என்ற காட்சிதான் மனக்கண் முன் தோன் றும். அது சரியல்ல. உடும்பு, கரடி, முதலை போன்றவை எதைப் பற்றினா லும் இறுகப் பற்றிக்கொள்ளும் கடைசிவரை விடாது. அப்படி சிவனை இறைவனை வழிபடும்போது அந்த தெய்வீக சிந்தனையைத் தவிர வேறு நினைவுகளிலும் மனம் அலை பாயக் கூடாது.

ஏகாக்கிர சித்தம் ஒருமைப்பட்ட மனம் வேண்டும் என்பதைக் குறிக் கவே சிவபூஜையில் கரடி என்றார்கள். மற்றுப் பற்று எனக்கு இன்றி நின் திருப்பாதமே மனம் பாலித்தேன் என்று தேவாரம் தெரிவிப்பதுதான் ஒருமைநிலை. ஒருமுகப்பட்ட தன்மை. பன்முகமாகச் சுடர்விடும் வைரமாக நம்மைப் பளபளக்கச் செய்யும் பரிணமிக்கச் செய்யும்.

# செய்தித்துளிகள்

## தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் வாக்களிக்க மேலும் ஒரு வாய்ப்பு

(கொழும்பு)

பொலிஸார், இராணுவம், சிவில் பாதுகாப்பு திணைக்களம், மாவட்ட செயலாளர் காரியாலயங்கள், தேர்தல் செயலக அதிகாரிகள் ஆகியோர் நேற்று தபால் மூலம் வாக்களித்துள்ளனர்.

வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்றுக் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை இடம்பெற்றன.

ஆனால் இன்றைய தினம் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மாத்திரமே வாக்களிக்க சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த தினங்களில் தபால்மூலம் வாக்களிக்க தவறு வோர் எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் தபால் மூலம் வாக்களிக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது

இதேவேளை கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளவர்களுக்கு ஒகஸ்ட் 4 ஆம் திகதி வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்க எதிர்பார்ப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள் ளார்.

ஒகஸ்ட் 5 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அதற்குள் கொரோனாவை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுப்பது அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## வாக்களிக்கச் சென்ற ஆசிரியையிடம் நகைகளை திருடிச் சென்ற கும்பல்

(கொழும்பு)

மாதம்பே - பம்பல பிரதேசத்தில் தபால்மூல வாக்குப்பதிவுக்காக சென்று கொண்டிருந்த ஆசிரியையின் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை திருடர்கள் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் குற்றவாளிகள் தொடர்பில் விசார ணைகளை முன்னெடுத்து வருவதாக, மாதம்பே பொலிஸார் தெரிவித்தனர். சிலாபம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை ஒன்றில் பணியாற்றும் ஆசிரியையின் தங்க நகையே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது. மேற்படி ஆசிரியை, பம்பல பகுதியில் அமைந்துள்ள கோட்டக் கல்வி காரியாலயத்துக்கு, வாக்களிப் பதற்காக நடந்து சென்ற போதே, இந்த சம்பவம் பதிவாகியுள் ளது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 160 | 300 |
| தக்காளி | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 80 |
| கோவா | 130 | 120 | 120 |
| கரட் | 100 | 150 | 160 |
| பூசணி | 40 | 40 | 50 |
| புடோல் | 60 | 50 | 100 |
| வாழைக்காய் | 140 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 90 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 120 |
| கறிமிளகாய் | 180 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 140 | 150 | 160 |
| போஞ்சி | 150 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 40 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 60-80 |
| இராசவள்ளி | — | 280 | — |
| வெங்காயப்பூ | 250 | 250 | 280 |
| முள்ளங்கி | 100 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 30 |
| ஈரப்பலா | 60 | 60 | 60 |




## ஆந்தைக் கூட்டம்

ஒரு காட்டில் சிரஞ்சீவி எனும் காகம் நெடுநாட்களாக ஆந்தைக் கூட்டத்தை அழிக்க வேண்டும் என்று நினைத்து ஒரு திட்டம் தீட்டியது.

அத்திட்டத்தின்படி சிரஞ்சீவி என்ற காகம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சுள்ளி என நாள்தோறும் சுள்ளிகளை எடுத்து வந்து ஒரு குகையின் வாயிலில் நிறைத்துக் கொண்டே வந்தது.


சிரஞ்சீவியின் நடத்தையில் எந்தவிதச் சந்தேகமும் யாருக்கும் ஏற்படவில்லை. பகற்பொழுதில் கண்பார்வையற்ற ஆந்தைக் கூட்டம் குகைக்குள் அடைந்து தூங்கிக் கொண்டிருந்தது.

இதுதான் தக்க தருணம் என்று நினைத்த சிரஞ்சீவி அந்தக் குகையை விட்டு வெளியேறியது.

தன்னுடைய காகராஜனைச் சந்தித்த சிரஞ்சீவி, ராஜா உடனடியாக எல்லாக் காகங்களையும் அழைத்து அவர்களிடம் ஆளுக்கொரு எரியும் கொள்ளியைக் கொடுங்கள்.

ஆந்தையின் குகை வாசலில் நான் குவித்து வைத்துள்ள சுள்ளிக் குவியலில் வைத்து விடட்டும்.

உடனே குகையின் வாசல் தீப்பற்றி எரியும். ஆந்தைக் கூட்டம் அனைத்தும் அந்தத் தீயில் வெந்து அழியும் என்றது சிரஞ்சீவி.



சிரஞ்சீவியின் திட்டப்படி, காகராஜா தன் காகக்கூட்டத்தை அழைத்துக் கொண்டு எரியும் கொள்ளியுடன் ஆந்தைக் குகையை அடைந்தது.

அங்கு சிரஞ்சீவி குவித்து வைத்துள்ள சுள்ளிகளில் தீயை மூட்டியது. நெருப்பும் புகையும் குகைக்குள் மண்டியதில் ஆந்தைகள் அனைத்தும் அழிந்தன.

ஆந்தைக் கூட்டம் அழிந்த பின்னர் காகராஜா தன்னுடைய பழைய ஆலமரத்தில் வழக்கம் போலத் தன்னுடைய அரசாட்சியை நடத்தி வந்தது.

பின் காகராஜன் சிரஞ்சீவியை அரசவைக்கு அழைத்து. நீ எப்படி ஆந்தைக் கூட்டத்தை நம்ப வைத்து ஏமாற்றினாய் என்று விளக்கிக் கூறு என்று கேட்டது.

நெருப்பு தன் வலிமையால் காட்டையே அழிக்க வல்லது. மரங்கள் தன் வேர்களை நிலத்தில் ஊன்றி இருந்தாலும் மிருதுவான தன்மை கொண்ட தண்ணீரும் காற்றும் மரங்களை வேரோடு பிடுங்கிச் சாய்த்து விடுகின்றனவே அது போலத்தான் நானும் செய்தேன் என்றது சிரஞ்சீவி.

**நீதி:**
**எதிரியை அழிக்க தகுந்த நேரம் வரும் வரை காத்திருந்து புத்தியால் அழிக்க வேண்டும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## வீரப்பரம்பரை

11

சுந்தர சோழனுக்கு பராந்தகன் தேவியம்மன், வானவன் மாதேவி என்று இரண்டு மனைவிகள்.

வானவன் மாதேவியின் மகன்கள் ஆதித்த கரிகாலன், அருண்மொழி வர்மன்.

இதனிடையே, இலங்கையிலுள்ள மன்னர்களின் ஆதரவால் ஆங்காங்கே சில குறுநில பாண்டிய மன்னர்களும் தமிழகத்தின் சில பகுதிகளைப் பிடித்து வைத்துக்கொண்டு சோழ ஆட்சிக்குக் கடும் நெருக்கடியைக் கொடுத்து வந்தார்கள்.

சிலகாலமாகப் பெரிய போர் எதிலும் ஈடுபடாது இருந்த சோழர்கள் இந்த முறை பாண்டியர்களை அழிக்கப் புறப்பட்டார்கள்.

சேவூரில் பாண்டிய மன்னனுக்கும் இரண்டாம் பராந்தகனின் படைக்கும் பெரும் போர் நடந்தது.

இப்போரைத் தலைமை ஏற்று நடத்திய இளவரசர் ஆதித்த கரிகாலன், தன் வீரதீரசெயல்களால் பாண்டியரைத் தோற்கடித்து சோழர்களுக்கு வெற்றியை தேடித்தந்தார்.



சுந்தரசோழன்

இதைப்பற்றி விழுப்புரம், எசாலம் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு சுந்தரசோழனின் மகனும் ராஜராஜனின் சகோதரனுமான ஆதித்த கரிகாலனின் வீரத்தை இவ்வாறு சொல்கிறது.

ராஜராஜனுடன் பிறந்தவனாகிய ஆதித்த கரிகாலன், வீரலட்சுமியினால் அணைக்கப்பட்டவனாக, பாண்டிய மன்னனைப் போர்க்களத்தில் கொன்று, அவனுடைய தலையைக் கொய்து, தஞ்சாவூர் கோட்டை வாயிலில் இருந்த பெரிய மரக்கழியின் உச்சியில் சொருகி வைத்து ஏழு கடலை இடையணியாகக் கொண்ட பூமியை அவ்விளவயது மன்னன் ஆண்டு வந்தான்.

சுந்தரசோழன், நந்திரபுரத்தையும் பழையாறையும் கவனித்துக்கொண்டு சோழப் பேரரசைக் கவனிக்கும் முழு அதிகாரத்தையும் ஆதித்தகரி காலனுக்கு வழங்கினார்.

ஆதித்த கரிகாலன், இளவரசர் என்கின்ற போதிலும் அனைத்து அரசியல், நிர்வாக நடவடிக்கைகளையும் தன் கவனத்திற்குக் கொண்டுவந்து தன் தந்தையின் சுமையைக் குறைத்தார்.

சுந்தரசோழன், இராஷ்டிரகூடர்களுடன் போரிட்டு மீண்டும் தொண்டை மண்டலத்தைச் சோழர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்.

இவருடைய ஆட்சிக் காலம் முழுக்க புதிய பகுதிகளை வெல்வதைக் காட்டிலும் இழந்த சிறிய பகுதிகளை மீட்டுக்கொண்டு வருவதில்தான் கவனம் செலுத்தவேண்டியிருந்தது. இறுதியில் காஞ்சிபுரத்தில் மரணமடைந்தார் இரண்டாம் பராந்தகன்.

அவரது மரணத்திற்கு முக்கிய காரணமாக அமைந்தது அவருடைய முதல் மகனான ஆதித்த கரிகாலனுக்கு ஏற்பட்ட துயர முடிவு.

விரைவில் தம் மகனை முழு அதிகாரத்துடன் ஆட்சியில் அமரவைத்து மன்னராக்கிவிடலாம் என்று சுந்தரசோழன் எண்ணிக் கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக அடையாளம் தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டார் ஆதித்த கரிகாலன்.

இதனால் மிகவும் துவண்டுபோன சுந்தரசோழன், அந்தச் சோகத்தினாலேயே மரணமடைந்தார். உத்தம சோழனின் சூழ்ச்சியால் தான் ஆதித்தகரிகாலனுக்கு அப்படியொரு துர்ப்பாக்கியம் ஏற்பட்டது என்பது பிறகுதான் தெரிய வந்தது.

சுந்தரசோழனின் மரணத்தையடுத்து அவருடைய மனைவியும் ராஜராஜனின் தாயுமாகிய வானவன்மாதேவி உடன்கட்டை ஏறித் தன்னுயிரைப் போக்கிக் கொண்டார் (வானவன் மாதேவி, மலையமான் குலத்தைச்சேர்ந்தவர். ராஜ ராஜன், இந்திரசமானன், ராஜ சர்வக்ஞன் என்னும் புலியைப் பயந்த பொன்மான் என்றுஅவரைப் புகழ்ந்து பேசுகிறது ஒரு கல்வெட்டு)

(தொடரும்)

உன் மனச்சாட்சியே உலகத்தை பார்க்கின்ற வெரியதுமான நீதிபதி.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பழிதரும் அரசியல் கருத்துக்களை அடுத்தவருடன் பகிராதீர்கள்

எதிர்வரும் ஓகஸ்ட் 05ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான பிரசாரத்தில் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் களமிறங்கியுள்ளன.

கட்சி ஆதரவாளர்கள் வீடு வீடாகச் சென்று கொள்கை விளக்கம் செய்வதுடன் துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்து வருகின்றனர்.

தேர்தல் என்றால் இவை எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான் என்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை.

எனினும் சமகால தகவல் தொழில்நுட்பத்தின் உச்சம் காரணமாக தோற்றம் பெற்ற சமூகவலைத்தளங்களும் தேர்தல் பிரசாரத்துக்குப் பெரும் பங்காற்றத் தொடங்கியுள்ளன.

குறிப்பாக முகநூல் பதிவுகள் தேர்தல் பிரசாரத்தில் விவாதக் களத்தை ஏற்படுத்தியுள்ளது.

வேட்பாளர்கள் என்ற தரப்பினர் விலகி நிற்க, அவர் தம் ஆதரவாளர்கள் கன்னை பிரிந்து தர்க்கிப்பதும் தாராளமாக நடந்தாகிறது.

இவையும் வீரக்களிப்புத் தொடர்பில் கணிசமான பங்களிப்பைச் செய்யவுள்ளதென்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இருந்தும் சமூக வலைத்தளங்களில் முன்வைக்கப்படுகின்ற கருத்துக்கள் ஆரோக்கியமாக அமைந்தால் அஃது எம் இனத்துக்கான நல்லதொரு தமிழ் அரசியல் தலைமையை உருவாக்கப் பேருதவி புரியும்.

மாறாக தவறான கருத்துக்கள், பொய்கள், புரட்டுக்கள் என்பன விவாதப் பொருளில் கலந்துவிட்டால் விளைவு பாரதூரமானதாக இருக்கும் என்பதை சகலரும் உய்த்துணர்தல் கட்டாயமானதாகும்.

அதாவது சமூக வலைத்தளங்கள் மூலமாக எவரும் எதுவும் சொல்லலாம் எழுதலாம் என்று வந்து விட்டால், அஃது மனச்சாட்சி என்ற அடிப்படையைத் தகர்த்து விடும்.

உண்மையில் இந்த உலகில் சமய நம்பிக்கைகளும் சட்டங்களும் மனிதர்களைக் கட்டுப்படுத்துவதாக நாம் கருதிக் கொண்டாலும் சமயம், சட்டம் என்பதைக் கடந்து மனச்சாட்சி என்பதே மனித வாழ்வியலில் பிரதானமானதாகும்.

மனச்சாட்சி என்பது மரத்துப் போனால் அல்லது பாவம் என்ற உணர்வை அழித்து விட்டால் பின்னர் கோபமும் கொடூரமுமே மனதில் விளையத் தொடங்கிவிடும்.

இங்குதான் மனச்சாட்சி பிசங்காமல் பார்த்துக் கொள்வது அவசியமாகிறது.

அதிலும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் இடம்பெறுகின்ற அத்தனை செயற்பாடுகளும் மாணவர்களின் மனச்சாட்சியை பிசங்காமல் வைத்திருப்பதற்கான ஏற்பாடுகளே.

இருந்தும் சமகாலத்து சமூக வலைத்தளங்களில் நடத்தப்படுகின்ற ஒவ்வாத விவாதங்கள் எங்கள் இளம் பிள்ளைகளின் மனச்சாட்சியைக் கருக்கி விடுமோ என்ற ஏக்கத்தைத் தரவே செய்கிறது.

சமூக வலைத்தளங்களில் ஆரோக்கியமான விவாதங்கள் முன்னெடுக்கப்படுமாயின் அஃது தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் கணிசமான முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

# தனியார் துறையினருக்கான ஊதியத்தை செப்டெம்பர் வரை வழங்க இணக்கம்

(கொழும்பு)

கொரோனா தொற்றினால் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு மத்தியில் தனியார் துறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது தொடர்பில் இணக்கம் காணப்பட்ட கால எல்லையை நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

கடந்த மே மற்றும் ஜூன மாதங்களில் தொழிலின்மை காரணமாக ஊழியர்களை வீடுகளில் தங்கவைக்க நேரிட்ட நிறுவனங்களின் ஊழியர்களுக்கான அடிப்படை சம்பளத்தில் 50 வீதம் அல்லது 14 ஆயிரத்து 500 ரூபா ஆகிய இரண்டில் மிகவும் சாதகமான தொகையை செலுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சேவை வழங்குநர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் திறன்விருத்தி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த இணக்கப்பாட்டிற்கு அமைய தனியார் துறையினருக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை குறித்த தொகையைச் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் இணை அமைச்சரவைப்பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (ஜ-8)

## 5 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைதானார்

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூர் பகுதியில் கசிப்பு விற்பனையில ஈடுபட்ட பெண் ஒருவர் நேற்று முன்தினம் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் இருந்து 5 லீற்றர் கசிப்பு பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ பிணையில் விடுதலை செய்யப்பட்டார். (4-5- 316)

## டிப்பருடன் சாரதி கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்றுப்பகுதியில் நேற்று முன்தினம் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் டிப்பருடன் சாரதி தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். (4-5- 316)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**இடப்புறத்தில் தெய்வயானை அம்மையின் கரத்தில் உள்ள நீலோத்பவம் இட நேத்திரமாகிய சந்திர ஒளிபட்டு அறுபது நாழிகையும் மலர்ந்தே இருக்கும். முருகப்பெருமானை உள்னன்புடன் உபாசனை செய்பவர்களின் வாழ்வு என்றைக்கும் மலர்ந்திருக்கும் என்பதை இதனால் உணர்க. இப்போது பெரும்பாலும் படம் எழுதுபவர்கள் இரண்டு தேவிமார்களின் கரங்களிலும் தாமரையையே போட்டு விடுகிறார்கள். இது பிழை. (தொடரும்)**

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 18 ஆம் திகதி சனிக கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** அச்செழு பிரதேசம், திக்கம், பாரதிதாசன் படிப்பகம், வியாபாரிமூலை, முத்துமாரி அம்மன் கோவிலடி, நாவலடி, இன்பருட்டி, சுப்பர்மடம், ஶ்ரீலங்கா பாடசாலை, சுப்பர்மடம் மரின்வெல்த் ஐஸ் தொழிற்சாலை, நாரந்தனை, நாரந்தனை நீர்ப்பாசனசபை, புளியங்கூடல், சரவணை, சுருவில் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கிளிநொச்சி நகரத்திலிருந்து பரந்தன் வரை, பரந்தன் சந்தியிலிருந்து பூநகரியூடாக கௌதாரிமுனை வரை, பரந்தன் சந்தியிலிருந்து புளியம்பொக்கணை வரை, தர்மபுரம், விசுவமடு, தேராவில், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, மாத்தளன், கரைச்சிக் குடியிருப்பு, முல்லைத் தீவு நகரம், சிலாவத்தை யிலிருந்து கொக்கிளாய் வரை, உமையாள்புரம், ஆனையிறவு, மாசுர சோரனபற்று, கரந்தை, இயக்கச்சி, மல்வில், முகாவில், விநாயகபுரம், கோதாண்டார்குளம், கோவில்வயல் ஆகிய பிரதேசங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கிறிஸ்தவகுளம், புளியங்குளம். ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரை Southbar பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மன்சாரம் தடைப்படும்.

## ஶ்ரீஶ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மாற்றமும் அன்பும்

மாற்றம் வேண்டுமென ஏங்குபவர்கள் சிலர் இருககின்றனர். அவர்கள் வாழ்வில் எல்லாமே தேங்கி நிற்பதாக உணர்ந்து தன் துணை, வேலை, இருப்பிடம் இவற்றை மாற்ற விரும்புகிறார்கள். மேலும் சிலர், மாற்றம் என்றால் அச்சம் கொள்கிறார்கள். அவர்கள் இருக்கும் விதமே பாதுகாப்பானதாக உணர்கின்றனர்.

இன்னும் சிலர், மாற்றத்தைப் பார்த்தாலும் பயத்தினால் அதை ஏற்றுக்கொள்வதில்லை. இன்னும் சிலர், மாற்றத்தைக் கவனிப்பதேயில்லை. இன்னும் சிலர், எதுவும் மாற்றம் உடையது என்பதை எண்ணுவதேயில்லை.

சிலர் எல்லாமே மாறிக்கொண்டேயிருப்பதை உணர்கிறார்கள்; ஆனாலும், ஏதோவொன்று மாறாமல் இருப்பதையும் காண்கிறார்கள். எல்லா மாற்றங்களுக்குமிடையில் மாறாத அந்த ஒன்றை யார் உணர்கிறாரோ, அவரே எல்லோரையும் விட அறிவில் சிறந்தவர்(ஞானி).

**கேள்வி:** அன்பு எப்போதும் மாறிக்கொண்டிருக்க வேண்டுமா?

**ஶ்ரீஶ்ரீ:** அன்பு உனது இயல்பு. உனது இயல்பு மாறமுடியாது. ஆனால், அன்பின் வெளிப்பாடு மாறுகிறது. அன்பு உனது இயல்பாதலால் நீ அன்பு பாராட்டாமல் இருக்க முடியாது.

தாய் குழந்தையிடம் முழுமையான அன்பு வைத்திருக்கின்றாள். சில சமயம் அவள் குழந்தைக்குப் பாலூட்டுகிறாள். சிலசமயம் குழந்தையிடம் கண்டிப்பாக இருக்கிறாள். “ வா, உட்கார், எழுது” என்கிறாள். சில சமயம் அறைகிறாள். அவள் இப்படிச்செய்வது அன்பினால்தான். இவை எல்லாமே அன்பு செலுத்துவதில் பலமுறைகள். அன்பின் வெளிப்பாடு மாறுகிறது. ஆனால், அன்பு மாறாதது. ஏனெனில் அது உன் இயல்பு.

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### 16 வகை இலட்சுமிகள்

**ஶ்ரீசாந்தலட்சுமி:-** பொறுமை கடலினும் பெரிது. பொறுத்தார் பூமியை ஆள்வார். பொறுமையுடனிருந்தால் ஶ்ரீசாந்தலட்சுமியின் அருள் கிடைக்கும்.

**ஶ்ரீகிருத்திலட்சுமி:-** நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும், மனதை ஒரு நிலைப்படுத்தி நேர்த்தியுடன் செய்தால், புகழ் தானாக வரும். மேலும் ஶ்ரீ கீர்த்தி லட்சுமியின் அருள் நிச்சயம் கிடைக்கும்.

**ஶ்ரீவிஜயலட்சுமி:-** விடாத முயற்சியும் உழைப்பும், நம்பிக்கையும் இருந்தால் நமக்கு எல்லா காரியங்களிலும் வெற்றி தான். ஶ்ரீவிஜயலட்சுமி எப்பொழுதும் நம்முடன் இருப்பாள்.

**ஶ்ரீஆரோக்கிய லட்சுமி:-** நாம் நம் உடல் ஆரோக்கியத்தை கவனித்தால் மட்டும் போதாது, உள்ளமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும், கோபம், பொறுமை, காமம், பேராசை போன்ற நோய்க் கிருமிகள் நம் மனதில் புகுந்து விடாமல் இருக்க ஶ்ரீ ஆரோக்கிய லட்சுமியை வணங்க வேண்டும். (முற்றும்)

# சர்வதேச அமைப்புகளிடமிருந்து கிடைக்கப் பெற்ற நிதிக்கு என்ன நடந்தது



(கொழும்பு)

**உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களிடமிருந்து நாட்டிற்கு கிடைக்கப் பெற்ற நிதிக்கு என்ன நடந்தது என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பினார்.**

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனாவை கட்டுப்படுத்த அரசாங்கத்திடம் ஸ்திரமான கொள்கையோன்று கிடையாது எனவும் சுட்டிக்காட்டினார்.

இன்று மீண்டும் கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனமே இந்த வைரஸை உடனடியாக கட்டுப்படுத்த முடியாது என அறிவித்துள்ளது. ஆனால், இலங்கையில் இதற்கேற்றவகையில் ஒன்றும் மேற்கொள்ளப்படவில்லை.

சுகாதார அமைச்சருக்கு இது தொடர்பாக தெளிவின்மை காணப்படுகிறது. உலக சுகாதார ஸ்தாபனம், ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்டவற்றிலிருந்து இலங்கைக்கு கிடைத்த நிதிக்கு என்ன ஆனது?

இது தொடர்பாக சுகாதார அமைச்சரும், அரசாங்கமும் பதில் கூறியே ஆகவேண்டும்" என அவர் தெரிவித்தார். (ஐ-4)

# நடமாடிய கொரோனா நோயாளி கலவானவில் 300 கடைகள் மூடல்

(கலவான)

கலவான பகுதியில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதை அடுத்து, அங்குள்ள 300 கடைகள் கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகலுடன் மூடப்பட்டுள்ளன.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றும், கலவான பகுதியைச் சேர்ந்த ஆலோசகர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


கந்தகாடு நிலையத்தில் இருந்து கலவானவுக்கு சென்றிருந்த அவர், கடைகள், வங்கி, மருந்தகம் மற்றும் பல வீடுகளுக்கும் சென்றிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதையடுத்து, கலவான பகுதியில் உள்ள 300 கடைகள் நேற்று முன்தினம் நண்பகலுடன் மூடப்பட்டன.

அதேவேளை, தொற்றாளர் சென்ற இடங்களில் உள்ளவர்களை சுயதனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் தொற்றாளரின் குடும்பத்தைச் சேர்ந்த 11 பேர் தியத்தலாவ தனிமைப்படுத்தல் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (ஐ-4)

# மீண்டும் களமிறங்குவேன் உசைன் போல்ட்

உலகின் அதிவேக ஓட்ட பந்தயராக திகழும் உசைன் போல்ட், மீண்டும் களம் இறங்குவேன் என்று அறிவித்துள்ளார்.




உலகின் மின்னல் வேக வீரராக வலம் வந்த ஜமைக்காவின் உசேன்போல்ட் ஒலிம்பிக்கில் 8 தங்கப்பதக்கமும், உலக தடகளத்தில் 11 தங்கப்பதக்கமும் அறுவடை செய்த மகத்தான சாதனையாளர் ஆவார். 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் அதிவேகமாக ஓடிய உலக சாதனையும் இவரது வசமே உள்ளது.

2017-ம் ஆண்டு ஓய்வு பெற்ற 33 வயதான உசேன் போல்ட் அளித்த ஒரு பேட்டியில், "எனது பயிற்சியாளர் கிளைன் மில்ஸ் மீண்டும் என்னிடம் வந்து, இதை செய்யலாம் என்று கூறினால், அதற்கு தயார். ஏனெனில் அவர் மீது நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறேன். நாம் இதை செய்யப்போகிறோம் என்று அவர் கூறினால், அது சாத்தியமே என்பதை அறிவேன். எனவே அவர் அழைத்தால் மறுபடியும் களம் இறங்க தயார்" என கூறினார்.

மேலும் உசைன் போல்ட்-காசிபென்னட் தம்பதிக்கு சமீபத்தில் பெண் குழந்தை பிறந்தது. "வாழ்க்கையில் ஒரு தந்தையாக நிறைய மாற்றிக்கொள்ள வேண்டியுள்ளது. இது, ஒரு உலக சாதனையை படைப்பதை விட கடினம்" என்றும் போல்ட் வேடிக்கையாக குறிப்பிட்டார். (4)

# ஹொங்கொங் சிறப்பு அந்தஸ்தை நீக்க கையொப்பமிட்ட ட்ரம்ப்

(ஹொங்கொங்)

ஹொங்கொங்கிற்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்தை நீக்குவதற்கான உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

தற்போது ஹொங்கொங், சீனாவிற்குச் சமனாகவே கருதப்படுமென அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு சட்டத்தை சீனா அமுல்படுத்தியதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான உறவில் தொடர்ச்சியாக விரிசல் ஏற்பட்டு வருகின்றது.

குறிப்பாக தற்போது தேசிய பாதுகாப்பு சட்டத்தை சீனா அமுல்படுத்தியுள்ளமைக்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# ஆசி தொடரில் இந்திய வீரர்களுக்கு தனிமைப்படுத்தப்படும் நாட்கள் குறைக்கப்படும் கங்குலி நம்பிக்கை



இந்திய அணி வீரர்கள் அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் போது அங்கு தனிமைப்படுத்தப்படும் நாட்களின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்று நம்புவதாக இந்திய கிரிக்கெட் வாரிய தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் வாரிய தலைவரும், முன்னாள் கப்டனுமான சவுரவ் கங்குலி டி.வி. சேனல் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது,

இந்திய அணி அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதை உறுதி செய்துள்ளோம்.

இதற்காக டிசெம்பர் மாதம் அவுஸ்திரேலியாவுக்கு செல்கிறோம். அங்கு சென்றதும் தனிமைப்படுத்துதல் நடைமுறையாக 2 வாரங்கள் விடுதியிலே முடங்கி இருந்தால் வீரர்கள் மிகவும் மன உளைச்சலுக்கும், ஏமாற்றத்திற்கும் உள்ளாவார்கள்.

எனவே தனிமைப்படுத்தும் நடைமுறை காலத்தை குறைப்பார்கள் என்று நம்புகிறேன். அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் மெல்பேர்னை தவிர்த்து மற்ற இடங்களில் கொரோனா பாதிப்பு வெகுவாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பார்க்கும் போது தனிமைப்படுத்தும் நாட்களை குறைப்பார்கள், விரைவாக போட்டிக்கு திரும்ப முடியும் என்று நம்புகிறேன்.

இது நிச்சயம் கடினமான தொடராக அமையப்போகிறது. 2 ஆண்டுக்கு முன்பு அவுஸ்திரேலியாவில் டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் நாம் கைப்பற்றினோம். அந்த தொடர் போல் இந்த தொடர் இருக்கப் போவதில்லை. தற்போது அவுஸ்திரேலிய அணி மிகவும் வலுவாக உள்ளது. இந்திய அணியும் நல்ல நிலையில் உள்ளது. நாம் அங்கு பட்டிங்கில் சிறப்பாக செயற்பட வேண்டியது அவசியமாகும். உலகின் சிறந்த அணிகள் வெளிநாட்டிலும் பட்டிங்கில் மிரட்டும். அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் நாம் வெற்றி கண்ட டெஸ்ட் போட்டிகளில் 400, 500, 600 ரன்கள் வரை குவித்தது உண்டு. இதைத்தான் இந்திய கப்டன் விராட் கோலியிடம் சொல்லியிருக்கிறேன்.

கோலியின் பட்டிங், கப்டன்ஷிப்பின் தரம் உயர்ந்த நிலையில் உள்ளது. நீங்கள் (கோலி) அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சிறப்பாக விளையாடினால் மட்டும் போதாது, அணியை வெற்றிக்கும் அழைத்துச் செல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். இது அவரது கப்டன்ஷிப்பை தீர்மானிக்கும் தொடராக இருக்கப்போகிறது. மொத்தத்தில் இது சிறப்பு வாய்ந்த, மைல்கல் தொடராக அமையும்.

கொரோனா பரவலால் நமது வீரர்கள் 6 மாதங்கள் கிரிக்கெட் விளையாடாமல் உள்ளனர். தொடர்ந்து உடல்தகுதியுடன் இருக்க வேண்டும் என்று கோலியிடம் கூறியிருக்கிறேன். அது மட்டுமின்றி முகமது ஷமி, ஜஸ்பிரித் பும்ரா, இஷாந்த் ஷர்மா, ஹர்திக் பாண்ட்யா போன்ற பவுலர்களும் உடல்தகுதியுடன் இருப்பதை உறுதி செய்யும்படி அறிவுறுத்தி இருக்கிறேன். அவுஸ்திரேலியாவுக்கு புறப்படும் போது அவர்களது உடல் தகுதி கச்சிதமாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4)

## பாடசாலைகள்...

முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே இணை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டு, கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதியும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் உறுதியளித்துள்ளனர்.

இதன்படி பாடசாலைகள் மற்றும் பரீட்சைகள் திட்டமிட்டபடி நடத்தப்படும் என்று அமைச்சர் குணவர்தன தெரிவித்தார்.

கல்விச் செயற்பாடு மற்றும் பரீட்சைகள் தொடர்பாக நேற்று முன்தினம் அமைச்சரவை கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

ஒன்று அல்லது இரண்டு மாணவர்கள் வைரஸ் தொற்றுக்குள்ளாகுவதை வைத்து, எதிர்கட்சிகள் மாணவர்களை அச்சத்தில் ஆழ்த்த முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டு, கட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் இராணுவத் தளபதி இருவரும் அரசாங்கத்திற்கு உத்தரவாதம் அளித்துள்ளனர் என்றும் குறிப்பிட்டார். (ம-3)

## சிறுவனை...

வவுனியா - சாம்பல்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுவனை காணவில்லை என வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, சாம்பல் தோட்டம், தம்பனை புளியங்குளம் பகுதியில் தனது உறவினர்களுடன் வசித்து வந்த 14 வயதுடைய விஜேந்திரன் பிரசாத் என்ற சிறுவன் நேற்று முன்தினம் உறவினர் வீட்டில் இருந்து கடைக்கு சென்ற நிலையில் வீடு திரும்பவில்லை.

இதனையடுத்து குறித்த சிறுவனை இரவு வரை தேடிய உறவினர்களும், அயலவர்களும் சிறுவன் கிடைக்காமையால் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3)

## வீட்டு வளாகத்தில்...

அடங்கிய இரும்புப் பெட்டி ஒன்று கண்டறியப்பட்டது. அதனையடுத்து நீதிமன்றின் உத்தரவில் அத்தனை கைக்குண்டுகளும் சிறப்பு அதிரடிப் படையினரால் செயலிழக்கம் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் நேற்றுக் காலை வீடொன்றை சுத்தம் செய்த போது, அந்த வீட்டு வளாகத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் பெட்டி ஒன்று கண்டறியப்பட்டது.

அதற்குள் வெடிபொருள்கள் இருப்பதை அவதானித்த வீட்டில் உள்ளவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்தனர். அதனை அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றின் அனுமதியைப் பொலிஸார் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிலையில் நீதிமன்றின் அனுமதியுடன் சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியுடன் நேற்று மாலை பெட்டியை அங்கிருந்து அகற்றியதுடன் அதற்குள்ளிருந்த 17 கைக்குண்டுகளும் செயலிழக்கம் செய்யப்பட்டன. (ம-3)

## அடுத்த வாரம்...

கொள்வதற்காக யாழ்ப்பாணம் வருகிறார்.

எதிர்வரும் வியாழக்கிழமை மாலை யாழ்ப்பாணத்திற்கு வருகை தர உள்ள ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார்.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மத குருமார்கள், கல்வியாளர்களுடன் சந்திப்பினையும் மேற்கொள்ளவுள்ளார். (ம-3,8)

## ஒருவருக்கு...

டுள்ளது.

அவர்களில் பூவரசங்குளம் தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் முல்லைத்தீவு விமானப் படையினர் தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த 102 பேர், வல்வெட்டித்துறைப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 4 பேர், முழங்காவில் தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த 3 பேர், வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 2 பேர், பூவரசங்குளம் தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த 2 பேர், முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த ஒருவர் ஆகியோரே இவ்வாறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3,18,78)

## மண்டைதீவு கடற்...

கடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து 111 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

மண்டைதீவு கடற்பரப்பில் சந்தேகத்திற்கிடமாக சென்ற படகினை கடற்படையினர் மறித்து சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது அதில் இருந்து சந்தேகத்துக்கிடமான முறையில் மூட்டைகள் வைக்கப்பட்டிருந்தன. அதனை கடற்படையினர் சோதனையிட்டபோது அதில் கஞ்சா போதைப்பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பாசையூர் மற்றும் நாவாந்துறை பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களே என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் மீட்கப்பட்ட 111 கிலோ கஞ்சாவையும் ஊர்காவற்றுறை பொலி ஸாரிடம் விசேட அதிரடிப் படையினர் ஊடாக பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## ஜனநாயகத்தை...

தாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் தமது விஞ்ஞாபனம் கவனம் செலுத்தும் என ரணில் தெரிவித்தார்.

அத்துடன், சர்வதேச நாடுகளுடனான உறவை மீள வலுப்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

"எந்த நாடும் ஐக்கிய நாடுகளை விட்டு வெளியேறவில்லை. எதிர்காலத்தில் இந்தக் கொள்கையையே தொடருவோம். யு.என்.பி தலைமையிலான 2001-2004 மற்றும் 2015-2019 அரசாங்கங்களின் போது நாங்கள் அனைத்து நாடுகளுடனும் நட்பு, உயர் மட்ட இராஜதந்திர உறவுகளைப் பேணி வருகிறோம்.

எங்கள் நெருங்கிய நட்பு நாடுகளில் இந்தியா, சீனா, ஜப்பான், தென் கொரியா, வியட்நாம், அமெரிக்கா, கனடா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, மத்திய கிழக்கு, சார்க், பிம்ஸ்டெக் மற்றும் ஆசியான் நாடுகள் மற்றும் கென்யா மற்றும் தென்னாபிரிக்கா ஆகியவை அடங்கும்" என விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.க அரசாங்கத்தின் கீழ், மின்சாரம் மற்றும் நீர் நுகர்வோர் மற்றும் வணிக சமூகத்திற்கு சலுகைகள் வழங்கப் படும், அதே நேரத்தில் வேலையின்மை தீர்க்கப்படும் என்று விக்கிரமசிங்க கூறினார்.

பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக இலங்கை வெளிநாட்டு நிதி உதவியை நாடும் என்றும் அவர் கூறினார்.

முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் குத்தகை நிறுவனங்களிடமிருந்து பாதுகாக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தார். (ம-3)

## பொருளாதார...

நெருக்கடியை மக்கள் மீது ஒருபோதும் சுமத்த மாட்டோம். மக்கள் மத்தியில் இருந்து அரசியல் செய்வதால் மக்களின் கஷ்டங்களை எம்மால் புரிந்து கொண்டு அதற்கு தீர்வு வழங்கவும் முடியும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி தேர்தலின் வெற்றியை தொடர்ந்து பாராளுமன்றத்தில் ஆதரவு இல்லாமல் அரச நிர்வாகத்தை முன்னெடுக்கின்றோம். அரசியலமைப்பின் 19வது திருத்தமும், கொவிட்-19 வைரஸ் தாக்குதலும் பொதுத்தேர்தலை பிற்போடச் செய்துள்ளது. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பலமான அரசாங்கம் ஒன்று தோற்றம் பெறுவது அத்தியாவசியமானது.

2015ம் ஆண்டு நான் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தேன். பின்னர் மக்களின் அழைப்பினால் மீண்டும் அரசியலில் செல்வாக்கு செலுத்தினேன். குறிப்பிட்ட காலப் பகுதியில் பலமான எதிர்க்கட்சியாக செயற்பட்டமையினால் அரசாங்கம் முன்னெடுத்த முறையற்ற செயற்பாடுகளை தவிர்க்க முடிந்தது. கடந்த அரசாங்கத்தில் மைத்திரி குறிப்பிட்டதை ரணில் கேட்கவில்லை. இவ்விரு தரப்பினரையும் அப்போதைய அமைச்சரவை மதிக்கவில்லை. இதனால் நாட்டில் பலவீனமான அரசாங்கம் செயற்பட்டது. இறுதியில் விளைவை மக்கள் எதிர்கொண்டார்கள். ஜனாதிபதி குறிப்பிடும் விடயங்களைப் பிரதமரும், அமைச்சரவையும் செயற்படுத்த வேண்டும். ஏனெனில் அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறைவேற்றுத்துறை அதிகாரம் ▷02

## தமிழில் பற்றுச்...

நிமிடங்கள் காத்திருந்து, தமிழில் எழுதி வாங்கிச் சென்று இருந்தார். யாழ்.பிரதான தபாலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது.

போக்குவரத்து குற்றம் ஒன்றுக்காக பொலிஸாரினால் ▷02


மஹஜன சம்பத
திகதி 2020/07/16
சீட்டிழுப்பு இலக்கம் 4185
P 0 0 4 4 2 8

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 16-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2480
P 04 45 59 68

மெகா பவர்
திகதி 16/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 552
E 22 28 39 48 52

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1597 திகதி 2020/07/16
A 31 43 54 69

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2863 வர்ணம் கபிலம் திகதி 16.07.2020
வெற்றி இலக்கங்கள் 32 53 59 60 தனுசு
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,509,516
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 982
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.07.16
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,524,065/-
வெற்றி இலக்கங்கள் 21 50 51 66 N

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1673
சீட்டிழுப்பு திகதி 16/07/2020
வெற்றி இலக்கங்கள் 17 20 54 67 C
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 50,805,148
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1176
சீட்டிழுப்பு திகதி 16.07.2020 வியாழக்கிழமை
U 02 43 59 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,320,376
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

# கொரோனாவை கட்டுப்படுத்தி மக்களை அரசு பாதுகாக்கும்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள சுகாதார நிலைமை தொடர்பில் அரசாங்கம் மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டு மக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ. தெரிவித்தார்

அலரி மாளிகையில் நேற்று (வியாழக்கிழமை) காலை நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனாக சந்திப்பின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த பிரதமர் ,"கொவிட் தொற்று முதன் முதலாக வந்தபோது அதனை கட்டுப்படுத்த முடியுமானதாயிற்று. கொரோனா ஒழிப்பு ஜனாதிபதி பணிக்குழு, அத்தியவசிய சேவை ஜனாதிபதி பணிக்குழு, அரச துறை, சுகாதார துறை, இராணுவம் உள்ளிட்ட முப்படையினர், பொலிஸார் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். விசேடமாக உளவுத்துறை மற்றும் சுகாதார துறை ஆகியன செய்த அர்ப்பணிப்பை இங்கு நிச்சயம் நினைவுகூற வேண்டும்.

இக்காலப்பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களை சந்தித்து வருகின்றனர். அது தொடர்பாக உங்களது இங்கு நிபுணர்கள் தெளிவுபடுத்துவர். நாங்கள் எப்போதும் மக்களின் பாதுகாப்பிற்காக நடவடிக்கை எடுத்தவர்கள். அதனால் எதிர்காலத்தில் மக்களை பாதுகாப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

தேர்தல் காலம் என்பதால் கொரோனா இரண்டாவது அலை நிலவிவருகிறது என தேர்தல் மேடைகளில் பிரசாரம் செய்து வருகின்றனர். மக்கள் பீதியில் உள்ள நிலையில் தேவையற்ற பீதியை ஏற்படுத்தாது செயற்பட வேண்டியது எமது பொறுப்பாகும். (ம-3,30)

### கட்சிப் பிரதிநிதிகளுடன் தேர்தல்கள் ஆணைக்குழு இன்று சந்திப்பு

(கொழும்பு)

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான விசேட சந்திப்பு ஒன்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் இன்று இடம்பெறவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

### மிருசுவில்...

சுனில் ரட்ணாயக்கவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியமைக்கு எதிராக உச்ச நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. 2000ஆம் ஆண்டு மிருசுவில் பகுதியில் 4 சிறுவர்கள் உள்ளிட்ட 8 பேரை படையினர் படுகொலை செய்த வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரட்ணாயக்காவிற்கு தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னிப்பளித்து விடுதலை செய்திருந்தார்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்டதனை ஆட்சேபித்து படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர் ஒருவரின் சார்பில் சட்டத்தரணி சயந்தன் உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

குறித்த வழக்கு கடந்த மே மாதம் 23ம் திகதி இலத்திரனியல் முறையில் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உச்ச நீதிமன்றில் இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதன் போது வாக்காளர் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**பயிற்சியுடன் கூடிய தொழில் வாய்ப்பு**

எமது நிறுவனத்தில் நாடளாவியரீதியில் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப் படவுள்ளது. உங்கள் தகைமைகள் மற்றும் திறமை அடிப்படையில் கொடுப்பனவுகள் மற்றும் சேர்மதிகள் வழங்கப்படும்.

- அனைத்து மாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பிக்கலாம்.
- அடிப்படைக் கொடுப்பனவு 15,000/= தொடக்கம் 28,000 /=
- ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அடிப்படைக் கொடுப்பனவு அதிகரிக்கப்படும்.
- வெளிமாவட்டத்தினருக்கு ஆறு மாதங்களின் பின்னர் அவர்களின் மாவட்டத்திற்கு இடம் மாற்றிக் கொடுக்கப்படும்.
- O/L, A/L படித்த இளைஞர்கள், யுவதிகள் யாவரும் தொடர்பு கொள்ளலாம்.

**நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்படுவர்.** (3332)

தொடர்புகளுக்கு - 077 157 1699

**பகுதிநேர வேலை வாய்ப்பு**

பெரிய வீடு. அதன் தோட்டம் ஆகியவற்றைப் பராமரிக்க மாலை நேரத்தில் வேலை செய்யக் கூடியவர்கள் (வயது 35 - 50ற்கும் இடையில்) தேவை.

தொடர்பு - 077 953 0496 (3321)

**பணியாளர் தேவை**

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு சமையலாளர், சமையல் உதவியாளர் போன்ற பணி நிலைகளுக்குரிய பணியாளர் தேவை. தகுதியுடையோர் நேரில் வருகை தரவும்.

077 649 1027
077 940 0963 (C-9905)

**இந்திய சாஸ்திரியார் வருகை**

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற
**இரத்தினசாமி** அவர்கள்
ஜாதகம், கைரேகை, எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும். (3259)

முன்பதிவுக்கு: 071 574 8358, 071 392 9703, 076 682 7368
இல.101, Kandy Rd, jaffna (யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்).

**தீபம் இன்ஸ்ரிடியூட்**

கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டம். சிறந்த குரல் வளம் இருந்தும் மேடைப் பாடகராக முடியாதவர்களுக்கு பாடகராக்கும் வகையில் பயிற்சி வழங்க உத்தேசித்துள்ளோம்.

குரல் வளமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு - 077 105 6694 (3321)

**வாடகைக்கு**

ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு (3325)

077 203 0309 , 077 818 5017

**மீண்டும்**



**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் **100%** பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113 (C-9879)

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536



**SINGAPORE WORK AND STUDENT VISA**
**சிங்கப்பூர் வேலைவாய்ப்பு**

- **வீட்டுப் பணியாளர் - சம்பளம் 68,000/-**
  இலவச வீசா, வயதெல்லை 23-45
- **Clerk Work - 2 வருட வீசா 255,000/-**
  தகைமை - Diploma, Degree
- **Nursing Government Hospital, Singapore Two Years Work Permit USD -6500/-**
  Monthly Salary - 265,000/-
  தகைமை - B.sc. or Nursing Certificate, Diploma.
- **Sales management - Hospitality Management**
  சம்பளம் - 140,000/- தகைமை - O/L 2 Credit Pass
- **Student Visa :- Course Period Six Months, Three Months Work Conformed after Course Completed**
  தகைமை - O/L ஐந்து பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.
  அத்துடன் ஆங்கிலம் S போதுமானது.
  Salary - 130,000/- , Course Fees - 3500 SD (3330)

**SUN TRAVELS**
132, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
076 136 8548 , 076 136 8549
Whatsapp, Viber - 077 936 1427

**விரைவு பொதிகள் சேவை**
**V2 TRAVELS**
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (C-9624)
0768226240


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.